உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 5	சித்தார்த்தி ஹு பங்குனிமீ கஉ 1920 ஹு மார்ச்மீ 13உ	பகுதி 9

கடவுள் வணக்கம்.

இனியே தெமக்குனருள் வருமோ வெனக்கருதி
    யேங்குதே நெஞ்ச மையோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
    றெண்ணவோ திடமில் லையே
அனியாய மாயிந்த உடலைநா னென்றுவரு
    மந்தகற் காளா கவோ
ஆடித் திரிந்துநான் கற்றதுங் கேட்டது
    மவலமாய்ப் போத னன்றோ
கனியேனும் வரியசெங் காயேனு முதிர்சருகு
    கந்தமூ லங்க ளேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
    கண்மூடி மௌனி யாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
    சாமிநீ யறியா ததோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
    சச்சிதா னந்த சிவமே.

சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதைமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தேனந்தோ வென்வி திவசமே.

ஆயுங் கலையுஞ் சுருதியுங் காண்டற் கரியவுனைத்
தோயும் படிக்குக் கருணைசெய் வாய்சுக வான்பொருளே
தாயும் பிதாவுந் தமருங் குருவுந் தனிமுதலும்
நீயும் பரையுமென் றேயுணர்ந் தேனிது நிச்சயமே.

ஆனந்தபோதினி

சித்தார்த்தி௵ பங்குனி௴ ௧௨

ஜாதிபேதம்

தண்கடலை யாடையாக வுடுத்த இப் பூவுலகையும், மற்ற அண்டங்களையும், இவற்றிலுள்ள சர அசர பேதமான எல்லாச் சீவராசிகளையும் ஆக்கியளித்துத் துடைக்கும் பரம் பொருளாகிய பகவான் மனிதரைப் படைக்குங் காலே வருண பேதத்தோடு தோன்றச் செய்யவில்லை யென்பதும், இப் பேதத்தை இடையில் மனிதர் தாங்களே யுண்டாக்கிக் கொண்டார்க ளென்பதும் யாவரும் ஒப்பத் தகுந்த விஷயமே. ஏனெனில் கருணையே யுருவாகவுடையவனும், பூரண பரிசுத்தத்தன்மை யுடையவனும், குற்ற மற்றவனும், எப்போதும் ஆன்மாக்களுக்கு நன்மையே செய்பவனு மாகிய அக் கருணாநிதி, படைக்கும்போதே ஒருவரை உயர்ந்த நிலைமையிலும் ஒருவரைத் தாழ்ந்த நிலைமையிலும் படைப்பா னென்றும், மனிதனிட மிருந்தாலே மிக்க இழிவானதாகக் கருதி வெறுக்கப்படும் பாரபட்சம் என்ற துர்க்குணம் சுத்தசத்துவாம்சம் பொருந்திய ஆண்டவனிடத் துண்டென்றும் எந்த மூடன்றான் கருதலாகும்? அதுவு மன்றி மனிதனால் உண்டாக்கப்பட்ட தாகையால் இப்பேதம் எல்லாக் காலங்களிலும் ஒரேநிலையிலிருந்திருக்கவில்லை. மேலும் இச்சாதிபேதம் நமது நாட்டில் மட்டுமே யிருக்கிற தன்றி உலகிலுள்ள மற்ற எந்நாட்டிலும் இருப்பதாய்த் தோன்றவில்லை. எந்த நாடுகளிலும் மனிதருக்குள் தொழில் அந்தஸ்து முதலியவிஷயங்களில் உயர்வு தாழ்வு என்ற பேதம் பாராட்டப்படுவது உண்மையே. ஆனால் நம் நாட்டிலிருப்பது போல் ஒற்றுமைக்கே யிடையூ றுண்டாக்கத்தக்க இவ்வளவு அகன்றபேதம் வேறெந்தத் தேசத்திலும் பாராட்டப்படுவ தில்லை. இத்தகைய பல காரணங்களால் இப் பேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டதல்ல வென்பது அங்கை நெல்லிபோல் விளங்குகின்றது. கடவுள் சிருஷ்டியில் கீழ்ஜாதி மேல்ஜாதி யென்று ஒரு வித்தியாசமுமில்லை யென்றும், அவர் ஜாதிமதபேதங்களைக் கடந்தவர் என்றும் நமது நூல்களிலும் முன்னோர்களாலும் ஐயமறத் தெளிவாய்க்

கூறப்பட்டிருக்கிறது. ஞானமடைய விரும்புவோரே, அதாவது கடவுளின் அருளைப் பெறுவோரே ஜாதி மத பேதங்களை யொழிக்க வேண்டுமெனின், கடவுளுக்கு அப் பேதங்க ளுண்டெனக் கருதுவது யாங்கனம்?

இனி இப்பேதம் முதலில் எப்படி யுண்டாயிற் றென்று நோக்கில் இரு விதங்களாகக் கூறப்படுகிறதெனக் காணலாம். அவற்றில், "முதலில் மனிதர்களின் ஜீவியத்திற்கு அவசியமான கிருஷி செய்தலும் தானியங்களைக் கொண்டு இதர நாடுகளிலுள்ள மற்றப் பொருள்களை வாங்கிவந்து விற்பதுமாகிய வைசியத் தொழில் செய்வோரும், அவசியம் நேர்ந்தபோது உயிரையும் பொருள்களையும் காப்பாற்றிக் கொள்வதற்கும் ஜனங்களின் தலைவனுயிருந்து பாதுகாப்பதற்கும் வேண்டிய யுத்தத்தொழில் செய்வோரும், யாவர்க்கும் கடவுள் வழிபாட்டையும் நீதி முறைகளையும் போதிக்கும் தொழில் செய்வோரும், ஜனசமூகத்தின் சௌகரியத்திற்கு வேண்டிய கீழ்த்தரமான தொழில்களைச் செய்வோரும் ஆகிய நான்கு வகுப்பாய்ப் பிரிந்தார்கள். இவர்கள் முறையே, வைசியர், க்ஷத்திரியர், பிராம்மணர், சூத்திரர் என்று அழைக்கப் பட்டார்கள்." என்பது ஒருவிதம்.

மற்றொருவிதம் — (பாரதம் - மோக்ஷ தருமத்தில் கீழ்வருமாறு கூறப்பட்டிருக்கிறது)

"ஆதியில் யாவரும் பிராம்மணர்களே. யாவரும் வருணபேதமின்றிப் பிரம்மாவினுல் பிரம்ம சம்பந்தமாகவே சிருஷ்டிக்கப்பட்டு தொழிலினுல் வருணங்களைப் பெற்றனர்கள்.

இவ்வாறிருந்த பிராம்மணர்களில் உலக போகபாக்கியங்களை யனுபவிப்பதில் இச்சையுற்று காமக்குரோத கோபாதிகளையடைந்து இரஜோகுணத்தைக் கைப்பற்றி, பிராம்மண ஆசாரங்கள் தருமங்கள் முதலியவற்றை ஏறக்குறையக் கைவிட்டவர்களே க்ஷத்திரியர்களாகிவிட்டார்கள்.

உழவுத்தொழில் செய்து பசுக்களை மேய்த்தும், வர்த்தகம் கைத்தொழில் முதலியன செய்தும் இரஜோ தமோகுணங்களைக் கைப்பற்றித் தங்கள் பிராம்மண ஆசாராதிகளைக் கைவிட்டவர்களே வைசியர்களானுர்கள்.

கொலை, பொய் முதலிய எவ்விதப் பாபக் கிருத்தியத்திற்கும் அஞ்சாதவர்களாய், எவ்வித இழிதொழிலையும் செய்பவர்களாய்த் தமோகுணச் சிரேஷ்டர்களாகி தங்கள் ஆசாரத்தை யறவே கைவிட்டவர்களே சூத்திரர்களானுர்கள்."

இவ்வாறிருக்க மநுஸ்மிருதியில் பிரம்மாவின் சிரசு முதலிய அவயவங்களிலிருந்து நால்வகைச் சாதியாரும் உதித்ததாய்க் கூறப்

பட்டிருக்கிறதே யெனில், இரண்டும் ஒரு அர்த்தமே. எவ்வாறெனின் பாரதத்தில் அனுபவப்படி ஜாதிக ளுண்டானதை விரித்துக் கூறியிருக்கிறது. அதையே மநுஸ்மிருதியில் தாரதம்மியமும் குணமும் தோன்றத் தொகுத்துக் கூறியிருக்கிறது. சிரசில் பிராம்மணர் உதித்தா ரென்றது, பிராம்மணனுடைய தொழில் அறிவு (அதாவது ஞான) சம்பந்தமான தென்றும், எண் சாண் தேகத்திற்குச் சிரசு பிரதானமா யிருப்பதுபோல் அத்தொழில் சிரேஷ்டமான தென்றும் குறிக்கிறது.

அவ்வாறே க்ஷத்திரியன் புஜபல பராக்கிரமத்தால் ஆகிய தொழில் செய்பவனென்றும், வைசியன் சகலவித உண் பண்டங்களும் வயிற்றில் போய்ச் சேர்வதுபோல், சகல பண்டங்களையும் சேகரம் செய்து வைத்துக் கொண்டு வேண்டியவர்களுக்கு விற்குந்தொழில் செய்பவன் என்றும், பாதங்கள் எத் தொழில் நிகழ்ச்சிக்கும் ஆதாரமாயிருந்து சகல தொழில்களுக்கும் உதவியா யிருப்பதுபோல் சூத்திரன் மற்ற மூவருணத்தார்களுக்கும் வேண்டிய சகலதொழில்களையும் செய்பவ னென்றும் குறிக்கிறது.

எல்லா வருணத்தாரும் மணம், பிதுர்க்கர்மம் முதலிய சந்தர்ப்பங்களில் கிரியைகளைச் செய்யும் போது பூணூலணிவதும் சத் ஆசாரத்தை யனுசரிப்பதும் வழக்கத்தில் இருப்பதால், பாரதத்தில் கூறியிருப்பது உண்மையென்றே விளங்குகிறது.

மநுஸ்மிருதி 10-வது அத்தியாயத்தில்,

"அனேகம் சூத்திரர்கள் பிராம்மணர்களாக மாறினார்கள். அனேகம் பிராம்மணர்கள் சூத்திரர்களாக மாறினார்கள். இப்படியே க்ஷத்திரிய வைசியரும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் முற்காலத்தில் அரசன் ஆணையால் அவனவன் யோக்கியதை நடக்கை இவற்றின்படி இப் பிரிவினை காக்கப்பட்டு வந்தது என்று விளங்குகிறது. பிற்காலத்தில் இச் சாதிப் பிரிவினையைப் பரம்பரையாக உறுதிப்படுத்திக் கொண்டு, ஐக்கியத்தை யிழந்து அந்தந்த வகுப்புக்குள்ளேயே உண்பதுங் கொள்வனை கொடுப்பனையும் வைத்துக் கொண்டார்கள். முன் இருந்த வரம்பை ஒரு அகன்ற மிக்க ஆழமான அகழிபோ லாக்கிக் கொண்டார்கள். இது மட்டுமல்ல; இன்னும் ஒவ்வொரு ஜாதியிலும் பல உட்பிரிவினைகளை யுண்டாக்கிக் கொண்டார்கள். இவற்றால், ஒற்றுமை யென்பதை வெறும் பெயர் மாத்திரமான நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். அந்தோ இதனால் உண்டான கெடுதிகளுக் கோர் அளவே யில்லை.

பிற்காலங்களில் கீழ்ச் சாதியாரை மிக்க இழிவாய் அடிமைகளைப்போல் நடத்தத் தொடங்கி மற்ற ஜாதியார்களைப்போல் அவர்

களுக்கு இருந்த சுதந்தரங்களை யெல்லாம் அவர்கள் அனுபவியா
வண்ணம் கட்டாயப்படுத்தி விட்டார்கள். திருட்டாந்தமாக சில
கீழ்ச்சாதியார் காலில் பாதரட்சை யணியவே கூடாதென்றும், குடை
பிடிக்கலாகாதென்றும், கலியாணம் செய்யும் போது ஊர்கோலம்
வருதல் முதலிய விசேஷ காலங்களில்கூட குதிரையாதி வாகனங்களி
லேறக்கூடா தென்றும் விதி யிருந்து வந்தது. இப்போது ஆங்கில
அரசாட்சியில் அத்தகைய அக்கிரமச் செயல்கள் நடைபெறா விடி
னும், சில கிராமாந்தரங்களில் கீழ்வகுப்பார் பாதரட்சை குடை
யிவற்றை யுபயோகித்துக் கொண்டு வீதிகளில் வரக் கூடாதென்று
கண்டித்துவரும் அநீதம் இப்போதும் நடந்து வருகிறதாகவே
தெரிகிறது.

இக்காலத்தில் ஜனங்கள் தலைகீழான நடக்கைகளை யுடையவர்க
ளாகிறார்கள். ஜாதிப்பிரிவினையில் அகன்ற வரம்பு ஏற்பட்டபின்
உயர்ந்த வகுப்பு, தாழ்ந்த வகுப்பு, சம வகுப்பு என்ற வித்தியாசங்
கள் ஏற்பட்டு, அவை யொரே தன்மையாய் நெடுநாளாய் நடந்து
வருகின்றன. இவர்களில் சமவகுப்பாய்க் கருதப்படுவோர் ஒருவர்
வீட்டில் ஒருவர் சமமாய்ப் பந்தி போசனம் செய்தல் சபையில்
புழங்குதல் இவைகளைமட்டும் அனுசரிக்கிறார்கள். ஆனால் கொள்
வனை கொடுப்பனை மட்டும் கிடையாது.

இப்போது இரண்டொரு ஜாதியார் தாங்கள் இப்போது மற்
றவர்களால் மதிக்கப்படுவதை விட மேலான ஜாதியார் என்று கூறிக்
கொள்வதோடு அதை நிரூபிக்க முயல்வதுமா யிருக்கிறார்கள். ஆனால்
நம்மைப்பற்றி நாம் உயர்வாய்க் கூறிக்கொண்டால் மற்றையோர்
நம்மை யிதுகாறும் மதித்து வருவதைவிட உயர்வகுப்பாராய மதித்
துத் தங்களோடு சமமாய் நடத்துவார்களா? என்று இவர்கள் சிந்
திப்பதில்லை. இதன்றி நாம் பிராமணன் என்கிறோம். நமது குலத்
தவர்க்கு (ஏக தேசத்தில் அல்ல: குலத்தில் பெரும்பாலார்க்கு)ப்
பிராம்மணர்க்கிருக்கவேண்டிய ஆசாரங்களும் நடக்கைகளும் உளவா
என்று சிந்திப்பதுமில்லை; ஜாதி பேதமே மனிதரால் ஏற்பட்டதா
கும் போது நாம் உயர்பதவிக்குரிய குணம் நடக்கை யாசாராதிகளை
யடைவதை விட்டு, வெறும்பட்டத்திற்கு ஆசைப்பட்டு, இக் காலத்
தில் அனேகர் தாங்களே தங்களுக்கோர் பட்டஞ் சூட்டிக் கொள்
வது போல், அதற்காக முயன்றுகொண்டு காலத்தை வீண் கழிப்
பதை விட நம் தாய்நாடு முன்னுக்கு வருவதற்கு வேண்டிய வழி
யில் பாடுபடுவது எவ்வளவோ நன்மையைத்தருமே என்று கருது
வது மில்லை.

இதுகாறும் கீழ் வகுப்பாரை நாம் முன் கூறியபடி நடத்தி வரு
வதால் நம் தாய்நாடு ஆன்மார்த்த விஷயத்தில் ஒரு பெருந்தீங்கை

யடைந்திருக்கிறது. மற்ற மதஸ்தர்கள் எவ்வளவோ பணச்செலவு செய்து மிக்க கஷ்டமெடுத்துக்கொண்டு, பிராணபயத்திற்கும் உடன்பட்டுத் தங்கள் மதத்தை அபிவிர்த்தி செய்ய முயல்கிறார்கள். அந்தோ! எவ்வளவோ அருமையானதும், ஒப் புயர்வற்றதும், அழியக்கூடாததும், பரிபூரணமுடையதும், உலகிலிப்போ திருப்பனவும், இனி தோன்றக்கூடியனவுமான சகல மதங்களுக்கும் தாய்போன்ற அஸ்திவார மானதுமாகிய நமது மதத்தின் அபிவிருத்திக்காக ஒரு முயற்சியும் செய்யாமலிருப்பது போதாது, நம் அநீத நடக்கையால் ஏழைகளாகிய நம்மவர்களில் இலக்ஷக்கணக்கான பேர்களை உண்மை நெறியுணராப் புறச் சமயத்திற்குத் தத்தம் செய்து விட்டோம்; இன்னும் செய்துகொண்டே யிருக்கிறோம். அந்தோ அவர்கள் பல காரணங்களால் பலவந்தப் படுத்தப்பட்ட சமயங்களில் விதியின்றி அன்னிய மதத்தில் சேர்ந்து கொண்டாலும், பிறகு உணர்வு வந்து தமது மதத்திற்கே திரும்பக் கருதினாலோ, அந்தோ நாம் ஏற்படுத்திக் கொண்ட அநீத வழக்கமே அவர்களை யப்படிச் செய்ய வொட்டாது தடுத்து அவர்கள் ஆன்மலாபத்தை யடியோ டழித்து விடுகிறது. சீர்திருத்தப் பறைபறையும் நம்மவர்கள் இத்தகைய முக்கிய விஷயங்களைப்பற்றிய திருத்தத்தைக் கவனிப்பதைக் காணோம்.

கீழ்ச்சாதியாரை இழிவாய் நடத்துதல், அவர்கள் சுதந்திரங்களைக் குறைத்தல், அவர்கள் கோயிலுக்குள் வரலாகாதென விதித்தல் முதலிய இத்தகைய விஷயங்களே அன்னிய மதஸ்தர் அவர்களை மயக்கித் தங்கள் மதத்தில் இழுத்துக் கொள்வதற்கு அனுகூலத்தை யளித்தது. தாழ்ந்த வகுப்பாரைத் தீண்டவுங் கூடாதென்று இழிவாய் நடத்தும் நம்மவர்களே, அவர்கள் புறச் சமயத்தில் சேர்ந்துகொண்டு 10 ரூபாய் சம்பளத்தி லிருக்கும்போது அவர்களுக்கு ஆசனமும் சமமரியாதையும் அளிக்கிறார்கள். அவர்களோடு கை குலுக்கிக் கொள்ளுகிறார்கள்.

இந்த மரியாதை யவர்களுக்கு எதனால் வந்தது? தன் மதத்தை விட்டுப் புறச்சமயம் புக்குப் பாபமூட்டை கட்டிக்கொண்டதற்காகவா? இல்லை யில்லை. ஆனால் சிலர் மதமாறுதலாலேயே நாம் அப்படிச் செய்வதாய் எளனம் செய்கிறார்கள். நாம் செய்யும் இச்செய்கை தாழ்ந்த வகுப்பிலுள்ள மற்றபேரையும் நமது மதத்தை விட்டோடும்படி தூண்டுகிறது. இப்படிக் கூறுவதால், அன்னிய மதத்தில் சேர்ந்த பிறகும் அவர்களை நாம் இழிவாகவே நடத்த வேண்டும் என்பது நமது கருத்தென்று தவறாய்க் கருதிவிட வேண்டாம். அன்னிய மதத்தில் சேர்ந்தபின் நாம் அவர்களுக்கு மரியாதை யளிப்பதின் காரணம் அவர்கள் தேக சுத்தி, உடைசுத்தி, பாஷா சுத்தி, கொஞ்சமேனும் கல்வி, ஆகிய இவைகளை யடைந்திருப்பதனாலேயே.

அந்தோ இச்சீர் திருத்தங்களை நாமே யவர்களுக்குப் போதித்து அவர்களையும் அன்போடு சமமாய் நடத்தியிருந்தால் இலட்சக் கணக்கான நம் சகோதர சகோதரிகள் அநியாயமாய் நமது மதத்தையும் கூட்டத்தையும் விட்டுப் பிரிந்திருக்க மாட்டார்களே!

இவர்களைத் தங்கள் மதத்திற்கு அழைத்துக்கொள்ளும் அன்னியநாட்டார் மட்டும் இவர்களைத் தங்கள் ஜாதியாராகவே பாவித்துச் சமமாய் நடத்துகிறார்களா? ஒரு காலுமில்லை. அவர்களும் இவர்களைத் தாழ்ந்தவர்களாகவே பாவித்து, நம்மவர் பாராட்டும் ஜாதிவித்தியாசம் போன்ற வித்தியாசமாகவே நடத்துகிறார்கள். ஆனால் கோயிலுக்கு வந்து கடவுள் சேவை செய்தல், மற்ற உலக சுகங்களை யனுபவித்தல் முதலியவற்றில் அவர்களுக்குச் சம சுதந்தரம் தந்து, உங்களைத் தீண்ட மாட்டோம், நீங்கள் தொட்டதைத் தின்ன மாட்டோம், தொட மாட்டோம் என்று அவர்களை இழிவாய் நடத்தாம லிருக்கிறார்கள். நமது நாட்டிற் பிறந்த நம் சகோதரர்களிடம் நாம் அவ்வாறு நடந்து கொள்ளலாகாதா?

இப்போது நம் நாட்டில் ஜாதி வித்தியாசம் என்பது உண்மையில் வாய்ப்பேச்சு மட்டில்தான் இருக்கிறதே யன்றி, அனுபவத்தில் பேதமு மில்லை குலாசார மென்பது மில்லை. காலத்திற்குத் தக்கவாறு அவை மாறிக் கொண்டே போகின்றன. இனியேனும் நாம் தாழ்ந்த வகுப்பாரை மேற்கண்ட சீர்திருத்தங்களால் மேல் நிலைக்குக் கொண்டு வராவிட்டால், நமது தாய் நாடு மேலோங்குவது கூடாத காரியமேயாகும். ஆண்டவன் இவ் விஷயத்தில் நம்மவர்க்கு நல்லறிவையும் சிரத்தையையும் ஊக்கத்தையும் தந்து, நாம் நமது பூர்வீக நிலைமையையடைய முயற்சிகளையும் இக்காலத்தில் இன்னும் நமக்குள் கட்சிப் பிரிவினைகளையும் கலகத்தையும் உண்டாக்கி நம் தாய் நாட்டின் க்ஷேமத்திற் கிடையூறிழைக்கும் கோடரிக் காம்புகளையும், வெளி விரோதிகளையும் தலையெடுக்காவண்ணம் ஒடுக்கி, நம்மவர் முயற்சி ஈடேறி நம் தாய் நாடு க்ஷேமமுறுமாறு அருள் புரியவேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

நாடகம்

"தேடேனோ வென்னுதை னெங்குற்றா னெனவோடித் தேடிச் சென்றே
நாடேனோ தணிகைதனி னாயகனே நின்னழகை நாடி நாடிக்
கூடேனோ வடியருடன் கோவேயெங் குகனேயெங் குருவே யென்று
பாடேனோ வானந்தப் பரவசமுற் றுன்கமலப் பதநண் ணேனோ
(அஷ்டோத்தர சதகம்)

நாம் எதற்காக இங்கு வந்தோமோ அதனைத் தேடி அடையவேண்டு மென்று மேலே கண்ட பாடல் தெளிவுறுத்துகிறது. நாம் அடையவேண்டியது அங்கு இல்லை, இங்கில்லை, நாம் வாசம் செய்யும் இச் சரீரத்திலேயே இருக்கிறதென நம் மூதாதைகள் நாடி அடைந்து சொல்லி யிருக்கிறார்கள். நாம் விளையாட்டாக இதனை அறிந்து கொள்ளும் பொருட்டு நாடகத்தை (நாடு + அகத்தை) வெளியில் நடிப்பித்துக் காண்பிக்கும் வழக்கத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாந்தர்கள் தாங்கள் எடுத்த ஜனனம் கடைத்தேறும் வண்ணம் பட்டணங்களிலும் கிராமங்களிலும் நாடகத்திற்கு ஒரு பைசா வேனும் பெறாது தெருக்கூத்தாக நடத்திவந்தார்கள். தற்போது நாடகம் என்பது பணம் பறிக்கும் வழக்கத்தில் வந்து பலரைக் கெடுத்து வருகிறது. இதனைப்பற்றிய விஷயம் யாவரு மறிந்த விஷயமாகச்சே நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கவனிப்போம்.

எவனொருவன் அகத்தை நாடுகிறானோ அவன் ஒன்றைக் காண்பான். அவன் கண்டதை வெளியில் சொல்லான் "கண்டவர் விண்டதில்லை கமலவின்பத்தின் காட்சி **" (நெஞ்சரி விளக்கம்). அவன் தனக்குத் தானே சிரிப்பான். தன்னை மறந்து ஆனந்தக் கூத்தாடுவான் தன்னை மறந்து பாடுவான். "ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென் புருகிப்—பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பிணநெஞ்சே * * * (திருவாசகம்.) இதனையே நாடகம் என்று சொல்லுவதுண்டு. நம் நாட்டிலே ஒரு பெரிய நாடகக்காரர் இருக்கிறார். இவரைப்பற்றிக் கேளாதவர் பாவம் செய்தவ ராவர். அவரே வெட்டவெளி நடன ராஜன் ஆவர்.

இந்த உலகமானது ஒரு பெரிய நாடக மேடை. இதில் தோன்றும் சகலக் காக்ஷிகளும் நாடக மேடையில் தொங்கவிடப்பட் டிருக்கும் சீன்கள் மாந்தர்கள் நடனக்காரர்கள். இவர்கள் இங்கு ஜனித்ததானது தங்கள் ஆக்டை (நடனத்தை) ஒருவர் குறை கூறா வண்ணம் நடிப்பிக்கவேண்டியே. நாம் ஆனந்த நாடக மாடா விட்டால் நம்கதி அதோகதியே. நம் திருக்கூத்தைக் கண்டு களிப்பவன் நம்நடராஜனே. நம் நடனத்தைக்கண்டு களித்து நமக்குச் சம்பளம் கொடுப்பவனும் அந்த நடேசனே.

நாம் நடிப்பிக்க வேண்டிய ஆக்டுகள் எழு வகைப்படும். மழலைப்பருவம், பள்ளிப்பருவம், வாலிபப்பருவம், வீரப்பருவம், வைதீகப்பருவம், ஞானப்பருவம், வயோதிகப்பருவம், ஆகிய இவ்வேழு பருவங்களை நமக்குக் கொடுத்து நாடகமேடையில் நடிக்க உத்திர வளித்து நம் நடனத்தை நடராஜர் இமை கொட்டாது பார்த்துக்கொண் டிருக்கிறார்.

"வேதாவை * * * * *

பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று போக்குவர வறநிகழ்த்து, மாதார வாதேய முழுதுநீ யாதலா லகிலமீ தென்னையாட்டி, யாடல் கண் டவனுநீ யாடுகின் றவனுநீ யருளுநீ மௌனஞான, தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ தமருநீ யாவுநீ காண், சர்வபரி பூரண வகண்டதத் துவமான சச்சிதா னந்த சிவமே. (தாயுமானவர்)

நாம் நம்முடைய தொழிலை மறந்து நம் சுயரூபத்தை அறியாது பகவானுக் கேற்காத தொழில்களைச் செய்து வருகிறோம். இனியாவது நம்

ஆனந்தனைக் கொண்டு நாடுவோம், நாடுவோம் நடராஜனை, தேடுவோம் தேடுவோம் நம்மகத்துளானை ஓடி ஆடிக்கண்ட பின் நம்நாதனுடன் சேருவோம்.

நாடகமே பக்தியிலீடுபடுத்தும்
நாடகமே ஆனந்தத் தாண்டவ மளிக்கும்
நாடகமே மெஞ்ஞானி யாக்குவிக்கும்
நாடகமே முத்தி சேர்ப்பிக்கும் நம்மை.

சுபம், சுபம், சுபம்.

எஸ். அயோத்திராம்.

குறிப்பு:—சாக்ஷாத் பரம் பொருளாகிய பகவான் நமக்குள்ளேயே சதா நடித்துக்கொண் டிருக்கிறார் என்றே வேதம் கோஷிக்கிறது. ஆன்றோர்களும் அந்த உண்மையை அனுபவமா யறிந்து கூறி யுள்ளார்கள். நமது உள்ளமே (அதாவது பரிசுத்தமான சத்துவ குணமாய்ச் சேடித்துச் சலன மின்றி நிற்கும் மனமே) அப் பரமேட்டியின் நாடக மேடையாகும். இந்த உள்ளம் சூக்கும பஞ்ச பூதங்களின் சத்துவ குண சமஷ்டியி லுற்பத்தியான அந்தக்கரணங்களில் ஆகாய அம்சத்தைச் சேர்ந்தது. ஆகையால் இதுவும் ஆகாயத்தைப் போல் பரிசுத்தமாய்ச் சலன மின்றி நிற்கும். இவ்வாறிருக்கும் இந்த உள்ளமாகிய ஆகாயமே சிதாகாசம் எனப் படும். அங்கு நடக்கும் நடனத்திற்குச் சிதாகாசத் திரு நடனம் என்று பெயர். முறைப்படி (நாடு+அகம்—அகம்=உள்ளம்) அகத்தை நாடுவோர் அந்த நாடகத்தைத் தரிசிப்பார்கள்.

அவ்வாறு பகவான் நமக்குள்ளே நடித்துக்கொண் டிருக்கிறார் என்ற உண்மையை உலகோர் எப்போதும் மறவாது உணர்ந்துகொண் டிருக்க வேண்டு மென்பதற்காகவே வெளியில் நடராஜப் பெருமான் பொன்னம்பலமாகிய மேடையில் சதா நடித்துக்கொண் டிருக்கிறார்.

கோயில் கட்டப் பட்டதே இக் கருத்தை வெளியிடற்கேயாகும். கோயில் மனிதன் தேகத்தையும், அதன் மூலஸ்தானம் உள்ளத்தையும், அங்கிருக்கும் மூர்த்தம் பகவானையும் குறிக்கும். ஆயினும் சிதம்பரத்திலுள்ள ஸ்தலத்தில் மனிதன் தேகத்தின் முக்கிய அங்கங்களையும், ஆறு தாரங்கள், பஞ்ச பூதங்கள், பஞ்ச கோசங்கள், சுழிமுனை முதலியவைகள் ஆகிய யாவற்றையும் குறிக்கும் ஸ்தானங்கள் எல்லாம் அமைக்கப்பட் டிருக்கின்றன. சிதம்பரம் என்பதே சிதாகாசத்தைக் குறிக்கும் (சித்=சித்தத்திலுள்ள, அம்பரம்=ஆகாயம். அதாவது சிதாகாசம்) அங்கு பரம் பொருளாகிய எம்பெருமான் காட்டும் நடனத்திற்கு, பஞ்ச கிருத்திய நடனம் என்று பெயர். அவர் கரத்திலேந்திய உடுக்கை சிருட்டியையும், அணைத்த கரம் திதியையும், மழு சங்காரத்தையும், முயலகன் மேல் ஊன்றிய பாதம் திரோபவத்தையும், தூக்கிய பாதம் அநுக்கிரகத்தையும் குறிக்கும். முயலகன் மாயை யாகும்.

இவ்வாறு வெளியில் காட்டப்பட் டிருக்கும் காட்சியை உள் நாட்டம் வைத்து உன் அகத்துக் குள்ளாகவே காண் என்பதே அந் நடனத்தின்

குறிப்பாகும். தாயுமான சுவாமிகள் "ஆகாரபுவனம் சிதம்பர இரகசியம்" என்ற பாகத்தில் அங்கு நடிக்கும் மூர்த்தம் மத பேதங் கடந்த ஏகநாயக ஞகிய பரம் பொருளே யென்பதை, "சன்மார்க்க ஞானமதின் பொருளும்..." என்ற பாசுரத்தில் கூறி அதற் கடுத்த பாசுரத்தில்,

"காண்டல் பெறப் புறத்தினுள்ள படியே யுள்ளுங்
காட்சி மெய்ந்நூல் சொலும்பதியாங் கடவுளே நீ
* * * * * *"

என்று அருளி யுள்ளது மேற் கண்ட கருத்தை விளக்குகின்றது.

முற்காலத்தில் (சுமார் 50-45 வருடங்களுக்கு முன் வரையில்) நாடகங்கள் சாதாரணமாய்க் காசின்றி யாவரும் காணுமாறே பகிரங்கத்தில் நடிக்கப்பட்டு வந்தன. அதோடு புராண இதிகாசங்கள், நீதிகளை விளக்கும் சரித்திரங்கள், கடவுளின் திருவிளையாடல்கள் இத்தகையவைகள் மட்டுமே நாடகமாக நடிக்கப்படும். அந்த நாடகங்கள் பிரசித்திபெற்ற கல்விமான்களால் வரையப்பட்டு நாடக இலக்கணங்கள் அமையப்பெற்றவை. அக்காலத்தில்கூட அத்தொழில் கௌரவமான தொழிலாகக் கருதப்பட்டதல்ல. ஆதலின் தாழ்ந்த வகுப்பினர்களாகிய வண்ணர், தாதர்கள், பண்டாரங்கள், வள்ளுவர்கள் இத்தகையோரே அத் தொழிலைச் செய்து வந்தனர்.

அந்தோ! கலிகாலக் கொடுமையால் இப்போது ஏற்பட்டிருக்கும் நாடகங்கள் யாவும் பஞ்சகாலத்திலும் ஜனங்களின் பொருளைக் கவர நோக்கங் கொண்டவைகளாகவே யிருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை மனிதர்களின் தாழ்ந்த உணர்ச்சிகளுக்கு உற்சாகத்தை யூட்டத்தக்கவைகளாகவே யிருக்கின்றன. அநேக வாலிபபுருடர்களும், மங்கையர்களும் தீய வழிகளில் பிரவேசித்து அழிவதே இதற்குப் போதிய சான்றும் என்பது பிரத்தியக்ஷ அனுபவம். அதிலும் இப்போது இச் சென்னையில் ஏறக்குறைய ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு நாடகக் கொட்டகையும், ஜனங்கள் இன்னும் தரித்திர மடையவேண்டு மென்று கூடவே ஒவ்வொரு பயாஸ்கோப் சாலையும் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன.

அந்தோ இதற்கு எடுத்துக் கொண்ட சிரத்தையில் கால்பங்காவது, ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு கல்விச்சாலை தாபிக்க எடுத்துக்கொண்டால் நம் தாய் நாடு எவ்வளவு சீர்பெறும்! துரைத்தனத்தார்தாம் இவற்றைக் கவனியாவிடினும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கென்று பாடுபடும் புண்ணியவான்களுக்குக் கூட இவற்றில் நாட்டம் செல்லாமலேயிருப்பது மிக்க பரிதாபமான விஷயமேயாகும். மேல் நாட்டார் போல் உலகசுக அனுபவங்களிலேயே பூரணநாட்டம் வைப்பதுதான் நாகரீகமென்று கருதுவது நமக்கு அறிவீனமேயாகும். அப்படிக் கருதினும் மேல் நாட்டாரின் செல்வ நிலைமைக்கும் நமது அஷ்டதரித்திர நிலைமைக்கு முள்ள பேதத்தையேனும் கவனிக்க வேண்டாமோ? ஆண்டவனே இத்தகைய நெறிகளில் நின்றும் நாம் திரும்பி க்ஷேமமடையுமாறு நமக்கு நல்லறிவைப் புகட்ட வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

கைவல்ய நவநீத வசனம்
(299-ம் பக்கத்தொடர்ச்சி)

[இம் மகா வாக்கியத்தின் பொருளைக் குற்றமற உணர்வது மிக்க அவசியமாகும். இதைத் தவருக உணர்வதே வீண் வாதங்களுக் கிடமுண்டாவதாகும். "நீ பிரம்மம்" என்பதால் உலகிற்கு நீயே கடவுள் என்று அர்த்தம் செய்து கொள்ள லாகாது. மற்றென்னை யெனில், "நீ அப்பிரம்மத்தின் ஓர் அம்சமே. பிரம்மத்தைப் போல் நீயும் சச்சி தானந்த இலட்சண முடையவனே. அதாவது ஒரு இனமே. ஆகையால் நாம் பிரமமே (அகம் பிரமம்) என்ற திட சித்தத்தோடு, அப் பதிப் பொருளில் கலந்து நான் என்ற தற்போதத்தை யடியோ டிழந்து விடுவையேல், அவ்வகண்ட சொரூபம் உன்னையுண்டு தானுக ஏகமயமாய்ப் பிரகாசிக்கும். அதாவது உன்னைத் தானுக்கிக் கொள்ளும். அப்போது நீ பிரமமாவை" என்பதையே இவ்வுபதேசப் பொருளாகக் கொள்ளல் வேண்டும்.

மேற் கூறியவாறு திட சித்தங்கொள்ளாதவரையில் முடிவான முத்தி கிடைக்கா தென்றுணர வேண்டும்.

தேகமுத லபிமான மணுவு மின்றித்
திடமாகப் பரப்பிரம நானே யென்னு
மேகமதாந் துணிவுற்றுப் பரமா னந்த
மெப்போது மிசைந்திடுவோன் சீவன் முத்தன்
சோகமுறு மகங்கார மிறையு மின்றிச்
சுத்தபர சின்மாத்ர சொரூப மாக
மோகமற நின்றுமகா நந்தம் பெற்று
மோனமடைந் திடுவோனே சீவன் முத்தன்.

சின்மயமாஞ் சிவத்தினிடை சித்தம் வைத்துச்
சிவமதுவே நாமென்றிங் கறியா தோர்க்குச்
சின்மயமாம் பரப்பிரமந் தானே யாகிச்
சலியாம லிருப்பதுவாம் விதேக முத்தத்
தன்மையொரு காலத்துஞ் சித்தி யாது
தத்துவமாய் நவில்கின்றே னிதாக வென்றே
நின்மலமாய் ரிபுமுனிவன் விதேக முத்த
னிலைபெற்ற விலக்கணமே நிகழ்த்தி னுனல்.
(ரிபு கீதை)

நானே சிவன்சிவனை நானென்று நாடிவெறுந்
தானுகி நின்றநிலை தானன்ருே—வானுப்
பவசலதி நீந்திவரும் பண்புடைய மாணு
சிவலோக மென்றே தெளி. (உபதேசமாலை—சிவயோகம்)

சிவத்தோ மசியுண்ணி னைந்துசிவ யோகநிட்டை
சவுக்கியதா னத்தேறித் தான்.
(சித்தாந்த தரிசனம்—சிவயோக வியல்)

(சிவத்தோமசி=சிவம்+தொம்+அசி=நீ சிவமா யிருக்கிருய்).

சீவனே பாசம் நீங்கியபின் சிவ மாகின்றது. பாச பந்தத்தால் சீவிப்பது கொண்டே அதற்குச் சீவனெனப் பெயர் வந்தது.

சீவனத்தால் சீவனெனல் சீவமிறந் தாலிந்தச்
சீவனே யந்தச் சிவம்

அந்தச் சிவநம்மை யன்றியிலை யென்றோர்த
லுந்துஞ் சிவயோக மோர்.
(சித்தாந்த தரிசனம்-பாசவிமோசன வியல்)

சிவன்வேறு சீவன்வே றென்றிரண்டாய்ச் செப்பு
மவன்சிவனை யென்றுமறி யாதான்—றவமில்லா
வுள்ளத்தார்க் கெய்துமோ வூர்க்குருவி யாகாச
மெள்ளப் பறந் தறியுமே.
(சிந்தனை வெண்பா—தக்ஷிண மூர்த்தி துதி)

வேதாந்தம் வேறு சித்தாந்தம் வேறு என்னும் பேதபுத்தி கொண்டு தருக்க மிடுவோர் இந்த ஆராய்ச்சிக்கு அருகர்க ளாகார்கள்.

அதுவேநீ யாமென் றருமறைகள் சொல்லு
மெதிர்சிவனே நீயாகு யென்னு—முதுசைவம்
வேறோவே றன்றோசொல் வேதியனே விண்விசும்பும்
வேறோவே றன்றோ விளம்பு. (சிந்தனை வெண்பா)

வேதாந்த சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே. (தாயுமானவர்)

சீடன் என்னை எவ்வாறு பிறித்தறிவே னெனல்

“இவ்வாறு காரணிகளோடு சம்பந்தப்பட்டு அவித்தையா சகிதமான சீவன் என்ற (வாச்சியார்த்தம்) இன்னதென்றும், அவித்தையோடு கலவாத பரிசுத்தமான ஆன்மா (இலக்கியார்த்தம்) என்பது இன்னதென்றும் தெரியாவண்ணம் கலந்துகொண்டு இருக்கும் இக் குழப்பத்தி லிருந்து நான் என்ற ஆன்மாவை, அதாவது என்னை, நான் எவ்வாறு வேறுபிரித் தறிவேன்?” என்று கேட்கும் சீடனை நோக்கி ஆசான் கூறுகிறார்:—

சற் சீடனே! உன்னை யெவ்வாறு நீ பிறித்துக் காண்பது என்ற மார்க்கத்தைச் சுருக்கமா யிங்குக் கூறுகிறோம்; மனதைப் புறம்போக வொட்டாது கவனத்தோடு கேட்டறிதி.

இப்போது தேகமே நீ யென்று கருதுகிறாய். நீயோ அழியாதவன். இத் தேகமோ ஒரு நாளைக்குப் பிணமாய் வீழ்ந் தழிந்து போவது. ஆகையால் ‘இத் தேகமே நாம்’ என்ற புத்தியை யடியோடு விட் டொழிதி. இத்தேகம் நீ யல்லை. இது அன்னமயகோசம். இது ஸ்தூல பஞ்ச பூதங்களின் கூட்டுறவால் உண்டானது.

ஒரு துருத்தி தன் மூக்கால் காற்றை வெளிவிடுவது போல் உன் நாசியால் வெளிவிடப்படுகிற பிராணமய கோசமும் நீ யல்ல. இந்தப்

பிராணன் சூக்கும பஞ்ச பூதங்களின் இரஜோ குண கற்பனையால் (சமஷ்டியில்) உண்டானது.

இனி அந்தக் கரணங்களில் மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் என்ற இரண்டு கோசங்களுள. இவை மனமாதி அந்தக் கரணங்களை யன்றி வேறில்லை. இவை சூக்கும பூதங்களின் சத்துவ குணத்தில் (சமஷ்டியில்) உண்டானவை. ஆகையால் இவைகளும் நீ யல்லை.

மீதி யிருக்கும் ஆனந்த மயகோசம் என்பது அவித்தை அல்லது அஞ்ஞானமாகிய தமோ குணமே யாகும். இதுவும் நீ யல்லை.

சச்சி தானந்த மயமாய், தார தம்மிய மின்றி சமமாய், ஸ்திரமாய் (சாக்கிராதி எந்த நிலைமையிலும் உள்ளதாய்), யாவற்றிற்கும் சாக்ஷி மாத்திரமாய், ஏகமாய், நித்திய தத்வ முடையதாய், வியாபகமாய் இருக்கின்ற ஆன்மாவே நீ யென்றறிந்து, அநித்தியமும் சடமும் துக்கமும் பொருந்திய விபரீத சுபாவங்களை யுடைய பஞ்ச கோசங்களாகிய குகையை விட்டு விலகி நிற்பாய்.

[தேகம் முதல் அவித்தை ஈருக உள்ள தத்துவக் கூட்டங்களனைத்தும் நீ யல்ல; இவற்றிற்கு அன்னியமா யிருந்து இவற்றை யெல்லாம் எதிரிட் டறியும் சாக்ஷியே ஆன்மாவாகிய நீ என்றபடி.]

இத் தூலதேகம் பஞ்சீ கிருத பஞ்ச மகா பூதங்களினின்றும் உண்டானது. இது அழிந்து போகத் தக்கது; ஆனபடியால் அநித்தியம்; மேலும் சடம்; தன்னை யறியாதது; ஆன்மாவா லறியப்படுவது. துக்கத்திற் கிடமானது. ஆகையால் இது அநுர்த சட துக்கமானது. ஆன்மா நித்திய மானது, சித்தப் பிரகாச முடையது, துக்க மற்றது, இந்த ஸ்தூல தேக மழிந்தாலும் நாம் என்கிற ஆன்மா அழிவதில்லை. ஒருவன் இறந்தான் என்ருல், தேகத்தை விட்டு நீங்கினன் என்பதையே பொருளாகக் கொள்கிரும். இறந்தவனுடைய தேகத்தைப் பார்த் தழுவோரும் "அப்பா எங்களை விட்டுப் போய் விட்டாயே" என்று அழுவது அனுபவம். இத் தேகம் அழிந்தாலும் நாம் அழிவதில்லை. எவ்வா றெனின் சென்ற, ஜன்மத்தில் தேகத்தோடிருந்து செய்த கர்மங்களின் காரணத்தாலேயே அத் தேகத்தை விட்டு மரித்த பின் இஜ் ஜன்ம மெடுத்தோம்; இனி இதையும் விட்டுப் போய் இப்போது செய்யும் கன்மங்களை யனுபவிக்க இன்னெரு ஜன்மமெடுப்போம். இவ்வாறு எண்ணிலவாய் நாம் விட்டுப்போகும் தேகங்கள் ஒவ்வொன்றும் அழிந்து கொண்டே போக நாம் இருந்து கொண்டேயிருக்கிரும். மேலும் என் தேகம் என்று நாம் கூறுவதாலேயே, தேகம் வேறு நாம் வேறென்றும், என் வீடு என்பதில் வீடு நமக்குச் சொந்தமான ஒருபொருளாக விருப்பது போல், தேகமும் நாம் சொந்த மாகக் கருதும் ஒருபொருளென்று தெரிகிறது. உண்மையில் நாம் அதை விட்டுப் போய் விட்ட பிறகு தீயோ, நாயோ, கழுகோ தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்கின்றன. கடத்தைக் காண்பவன் கடமாகாது கடத்திற்கு அன்னியமான ஒரு வஸ்து வாவது போல், தேகத்தைக் காணும் நாம் தேக மல்ல. நாம் ஆன்மா. இதைப் பற்றிய வாசாஞானமான உணர்ச்சி ஏறக் குறைய யாவர்க்குமே யுண்டெனலாம். ஆனல் அனுபவமாய்த்

தேகத்தை நீங்கி நிற்கும் நிலையை யடையச் சூக்கும அறிவு வேண்டும். பஞ்ச கோசங்களில் இத் தூல தேகம் அன்னமய கோச மானதால் இது நாமல்ல வென்றறிந்து இதை விட்டு நீங்கி நின்றால் அன்னமய கோசம் ஒழிந்த தாகும்.

மற்றைய நான்கு கோசங்களில், பிராணமயகோசம், மனோ மய கோசம், விஞ்ஞான மய கோசம் இந்த மூன்றும் ஆன்மா அவ் வப்போது அந்தக் கரணங்கள், பிராண வாயு, இவற்றில் சிலவற்றோடு கூடி நிற்கும் நிலைமைகளாகும்.

இவற்றில் மனமாதி அந்தக் கரணங்கள் தன்மாத்திரை பூதங்களின் சத்துவாம்ச சமஷ்டியில் உற்பத்தியானவை. இவைகளும் ஒரு அவத்தையி லிருந்தும் ஒரு அவத்தையில் இல்லாமலும் போவதால் அநித்தியமே. இவை தம்மைத் தாமறியா; இவற்றில் ஒவ் வொன்றும் தன் தொழிலை மட்டுமே செய்யுமன்றிப் பிறி தொன்றின் தொழிலைச் செய்யாது. ஒன்றை யொன்று மறியா. அறிவின் பிரகாச மின்றித் தாமே விளங்கா. இவற்றால் இவை சடமே. சதா பலவித துக்கத்தை யளித்துக் கொண்டிருப்பவை களே. இவை ஆன்மாவா லறியப்படுகின்றன. அடக்கவும் படுகின்றன. ஆன்மாவாலறியப் படும் எதுவும் ஆன்மாவாகாது. ஆகையால் நம்மால் காணப் பட்டவை அறியப்பட்டவை யெல்லாம் நாம் அல்ல வென்றே தள் ளத் தக்கவை யாகும்.

"கண்டன வல்ல வென்றே கழித்திடு மிறுதிக் கண்ணே
கொண்டது பரமா னந்தக் கோதிலா முத்தி யத்தால் * *"

"உள்ளது மில்லது மாகி—முன்
னுணர்வது வாயுன் னுளங்கண்ட தெல்லாம்
தள்ளெனச் சொல்லியெ னையன்—என்னைத்
தானுக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி—சங்கர.

பாராதி பூதம் நீயல்லை—உன்னிப்
பாரிந் திரியம் கரணநீ யல்லை
யாரா யறிவுநீ யென்று—னையன்
அன்பா யுரைத்தசொல் லானந்தந் தோழி—சங்கர ..."

(தாயுமானவர்)

இந்த அந்தக் கரணம் நம்மால் நீக்கப்பட வேண்டியவற்றி லொன்று கும்.

"அந்தக் கரண மறிந்து துறப்பார்க்குப்
பந்த மிறந்ததென் றுந்திபற
பாழ்வெளி யுள்ளதென் றுந்திபற"

(திருவுந்தியார்)

மேலும் இவை என் மனம், என் புத்தி, என் சித்தம் என்று ஆன்மா வால் அன்னியமாக விவகரிக்கப் படுவதாலேயே இவை ஆன்மாவாகா வென நன்கறிய லாகும்.

இந்த அந்தக் கரணங்களில் அடங்கி யுள்ள பிராணமய மனோமய விஞ்ஞான மய கோசங்கள் போக ஆனந்த மயகோசம் ஒன்றே எஞ்சி நிற்கிறது. ஆனந்த மய கோசம் என்பது காரண சரீரமே யாகும். அனுபவத்தில் அது நித்திரை யாகும். நித்திரையில் கருவி கரணங்க ளெல்லாம் செயலற்று ஒடுங்கி விட ஆன்மா அவித்தையாகிய அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடக்கிறது. இந்த அவித்தை மூலப் பிரகிருதியின் இராஜோ குண கற்பனையா லுண்டானது. இது நாமல்ல. ஸ்தூல சூக்கும தேகங்களோடு ஆன்மா சம்பந்தப் பட்டு சாக்கிர சொப்பன அவஸ்தைகளை யனுபவிப்பது போல், இக் காரண தேகத் தோடும் சம்பந்தப் பட்டு சுழுத்தி யவஸ்தையை யனுபவிக்கிறது.

ஆகையால் ஸ்தூல சூக்கும தேகங்களைப் போல் காரண தேகமும் நாமல்ல. அதுவும் ஆன்மாவினால் அறியப் படுவதே. ஆன்மா அதையும் எதிரிட்டறிந்து நீக்கித் தன்னை யறியும் சக்தியுடையது. அறியாமையாகிய அஞ்ஞானமே அவித்தை. அது ஆன்மாவாகாது.

“வந்தெனுடல் பொருளா......
ஐந்து புலனைம்பூதங் கரணமாதி
யடுத்தகுண மத்தனையுமல்லை யல்லை
இந்தவுட லறிவறியாமையுநீயல்லை * * * ”
* * * * *

(தாயுமானவர்)

“மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்மேவு மறிவறியா மைகடா னேது
மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்பிரிய மோதபிர மோத மேது
மூலவுட னீயல்ல வென்று போனால்
முரண்மூட சடகுனி யந்தர் மேது
மூலவுட னீயல்ல வென்று போனால்
முரணுதிக் குயர்சாக்ஷி நீயாங் காணே”

(பரமானந்த தீபம்)

(மூலவுடல் என்பது காரண சரீரம்.)

இன்னும் பிராணவாயுவும் நாமல்ல வென்றே யுணர வேண்டும். யோகம் மூர்ச்சை முதலிய சமயங்களில் பிராண வாயு இயங்காதிருந்தும் நாம் இருந்து கொண்டே யிருக்கிறோம். ஓர் வித ஆமை மாதக் கணக்காக மண்ணில் உசுவாச நிசுவாச மின்றிப் புதையுண்டு கிடக்கிறது. மேலும் இப் பிராணவாயு ஜடம். தன்னையு மறியாது. வேறொன்றையு மறியாது. நாம் வலதுநாசியில் ஓடுகிறோமா இடதுநாசியி லோடுகிறோமா என்பதை யுணராது. நித்திரையில் தனக்கருகி லிருக்கும் மூக்கணியை யொருவர் கவர்ந்து சென்றாலும் இது அறியாது. ‘என் பிராணன்’ என்று ஆன்மா இதை வேறு பிறித்தறிகிறது. இதை யியக்கி வைக்கவும் அடக்கி வைக்கவும் ஆன்மாவிற்குச் சக்தி யுண்டு. இப் பிராணன் சூக்கும பூதங்களின் இராஜோ குண சமஷ்டியில் உற்பத்தி யானது. இவ் வாற்றால் இந்தப் பிராணனும் நாமல்ல வென்று நன்கு விளங்குகிறது.

மேற் கூறிய காரணங்களால் தேகம் கரணங்கள் பிராணன் அவத்தை முதலிய இந்தத் தத்துவக் கூட்டங்களனைத்து மடங்கிய பஞ்சகோசங்கள் ஆன்மாவாகிய நாமல்ல வென்றும், இப் பஞ்சகோசங்களை வேறு பிறித்தறியும் ஆன்மாவாகிய சீவசாக்ஷியே நாமென்றும் அறிய வேண்டும்.

"கோசமைந்து மொவ்வொன்ருய்ப் பிரித்து வேருய்க்
குறித்தறியி லன்னியமா யிருக்கை யாலே
கோசமைந்து மொவ்வொன்ருய்ப் பிரித்து வேருய்க்
குறித்தறியில் விக்ஷேப மீன்ற தாகுங்
கோசமைந்து மொவ்வொன்ருய்ப் பிரித்து வேருய்க்
குறித்தறியில் நீயறிவா யதுநீ யல்ல
கோசமைந்து மொவ்வொன்ருய்ப் பிரித்து வேருய்க்
குறித்தறியு முயர்சாக்ஷி நீயாங் காணே."

(பரமானந்த தீபம்)

"பஞ்சகோ சத்தைப் பகுந்தறிந் தோருக்கு
நெஞ்ச மிறந்ததென் றுந்தீபற
நிட்டைய தாகுமென் றுந்தீபற" (திருவுந்தியார்)

(தொடரும்.)

சீடன்.

ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(190-வது பக்கத்தொடர்ச்சி)

"கண்டொன்று சொல்லேல்."

"கண்டு - ஒன்றைக் கண்டு, ஒன்று - வேறொன்றை, சொல்லேல் - (நீ சாட்சியாகும் போது) சொல்லாதே. (அதாவது, பொய்ச் சாட்சி கூருதே" என்பது இதன் பொருள்.

ஒரு நகரத்தில் 'சங்கன்' என்னும் பெயரையுடைய ஒருவன் இருந்தான். இவன் மிகவும் பேராசைக்காரன். சிறிது பொருள் கிடைப்பதாயிருந்தாலும் அதற்காக எந்தத் தீங்கையும் துணிந்து செய்து விடுவான். இவனுக்கு இளமையில், 'கண்டொன்று சொல்லேல்' என்னும் ஔவையார் நீதியை, உபாத்தியார் நன்ருகப் போதித்திருந்தும் பணத்திற் காசைப்பட்டுப் பொய்ச்சாட்சி சொல்லும் துர்க்குணத்தை இவன் விடுவதில்லை.

ஒரு தினம், அந்நகரத்தில் ஜன சஞ்சார மில்லாத ஒரு தோட்டத்தின் மார்க்கமாக ஒரு மனிதன் போய்க்கொண் டிருந்தான். அச் சமயத்தில் ஒரு கொலைக்காரன் வந்து அவனை ஈட்டியாற் குத்திவிட்டு ஓடினுன். உடனே அவன் தன்மேற் பாய்ந்த ஈட்டியோடு கீழேவீழ்ந்து மரணமானுன். இந்தப் பரிதாப மரணத்தை அங்கு திடுமென வந்த ஒரு மனிதன் கண்டு, "ஐயோ! எவனே பாவி இவனைக் கொலைசெய்து விட்டானே" என்று மன மிரங்கி, மரணமடைந்தவன் சமீபத்திற் போய் அவன்மேற் பாய்ந்திருந்த ஈட்டியைப் பிடுங்குதற்கு அதன்மேற் கையை வைத்தான். அப்படி வைக்கவே, திடுமென ஒரு சேவகன் பக்கத்தி

லிருந்து குறுக்கே ஓடி வந்து, 'அடே! கொலைகாரப் பயலே' என்று அவனைப் பிடித்துக் கொண்டான். அவன், "ஐயா! நான் கொலை செய்யவில்லை; எவனோ ஒருவன் செய்துவிட்டு ஓடிப்போனான்; நான், கொலையுண்டவன்மேல் இரக்க முற்று ஈட்டியைப் பிடுங்கினேன்; இஃதுண்மை" என்றான். அவன் என்ன சொல்லியும் சேவகன் கேளாமல் அவனை நியாயஸ்தலத்திற்கு இழுத்துக் கொண்டு போனான். அவ்வாறு போகும்போது சேவகன், 'இவன்மேல் கொலைக் குற்றத்தைச் சுமத்துவதற்கு ஒரு சாக்ஷி வேண்டுமே, என்று யோசித்தான். அப்போது, பொய்ச் சாக்ஷிக்காரனாகிய சங்கன் எதிரே வந்தான். அவனைக் கண்டதும் சேவகன் "நண்பா! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல நீ வந்தாய்; நான் ஒரு கொலைக் கேஸ் கொண்டு போகிறேன்; இதை நீ கண்டதாகச் சாக்ஷி சொல்ல வேண்டும்; உனக்கு அதிகப் பணம் தருகிறேன்; இவன் கொலை செய்ததாகவே நீ கூற வேண்டும்'' என்று சொல்ல, அவன் கொஞ்ச தூரத்திற் கப்பால் வரும்போது நடந்த உண்மையைக் கண்ணாரக் கண்டிருந்தும் பணத்திற் காசைப்பட்டு அதற் கிசைந்தான்.

சேவகன் என் இவ்வாறு அநியாயஞ் செய்யத் தொடங்கினானெனில், கொலை யுண்டவனுக்கும் இவனுக்கும் நீடித்த விரோதம்; சேவகனிடம் அகப்பட்டவனும் அவனுக்கு விரோதிதான். இதனாலேயே அத்தினம் தன்னுடைய விரோதிகள் இருவரும் முன் பின்னாகப் போவதையுணர்ந்து ஒரு கொலைகாரனை யேவி முன்னே சென்ற தன் விரோதியைக் கொல்லு வித்துப் பின்னே வந்த நிரபராதி ஈட்டியைப் பிடுங்குந் தருணம் பார்த்துக் கையும் மெய்யுமாகக் கண்டு பிடிப்பவன் போல அவனைப் பிடித்திழுத்துக்கொண்டு போனான். அவனுக்குத் தகுதியான சாக்ஷிக்காரனும் கிடைத்து விட்டான்.

பின்பு சேவகன் தன் கேஸை நியாயாதிபதியிடம் கொண்டுபோனான். நியாயாதிபதி விசாரித்தார். மெய்யாக அவன் கொலை செய்ததாகவே இருவரும் கூறினார்கள். அவர்களில் சங்கன் எல்லாச்சங்கதிகளையும் நேரில் பார்த்தவன் போலவே பொய்யும் புளுகும் சேர்த்து வெகு சாமர்த்தியமாகக் கூறினான். நியாயாதிபதியின் மாளிகை கொலை நடந்த விடத்திற்கு எதிரே யிருந்தபடியால் அவர் மேல்மாடத்தி லிருந்தபடியே அங்கு நடந்தவைகளை யெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தார். கேஸின் உண்மை முழுவதும் அவருக்குத் தெரிந்திருந்தது. அதனால் அவர், கொலைக் கைதியை விடுதலை செய்து உண்மையான கொலையாளியைக் கண்டு பிடித்துக் கொண்டு வரச் செய்து அவனுக்கு மரண தண்டனை விதித்து, சேவகனுக்கும் கடின தண்டனை ஏற்படுத்தி விட்டுப் பொய்ச் சாக்ஷிகூறின சங்கனுக்கு திரிக்கை வாரினால் இரண்டு டஜன் அடி கொடுக்கும்படி தீர்ப்பளித்தார். ஐயோ! சங்கன் பாடு திண்டாட்டமாய் விட்டது. தலையாரிகள் அவன் முதுகை உரித்து விட்டார்கள். சங்கன் சௌக்கிய மடைந்து வெளியேற இரண்டு மூன்று மாதங்க ளாயின. அவனுக்கு வெளியில் வரவும் வெட்கமாய்விட்டது. அதன்மேல் அவன், "கண்டொன்று சொல்லேல்'' என்ற நம் குரு உபதேசத்தை மறந்ததா லன்றோ நமக்கு இக்கதி நேர்ந்தது'' என்று அத்துர்ப்பழக்கத்தை விட்டான்.

S. V. ஆறுமுகன்.

சிறுவர்க்குரிய சில நீதி மொழிகள்.

ஜப்பானில் பிரசித்தி பெற்றிருந்தவரான ஜனரல் நோகி என்பவர் சிறுவர்களுக்கு உபதேசித்த சில நீதிமொழிகள் வருமாறு:—

1. வாயை மூடிக்கொண்டிரு. எப்போதும் வாயைத் திறந்து கொண்டிருப்பவன், தன்னுடைய மனது வெற்று மனதென்பதைக் காட்டுகிறான்.

2. நீ எதைப் பார்க்கிறாயோ அதைக் கவனி. எவனுடைய கண் எப்போதும் அலைந்துகொண் டிருக்கிறதோ, அவன் தன்னுடைய மனதும் அலைந்துகொண் டிருக்கிற தென்பதைத் தெரிவிக்கிறான்.

3. உன் மரியாதையைச் செலுத்தும்போது, யாரை நமஸ்கரிக்கிறாயோ அவரைப் பார்.

4. உன்னுடைய முன்னோரின் பெருமையையும், உன் குடும்பத்தின் பெருமையையும் மறவாமல், முன்னோர் ஞாபகத்திற்கு மரியாதை செலுத்துவது அவசியமானது.

5. ஒவ்வொரு பையனும் ஆண்மையோடு ஒழுகவேண்டும். பெண் தன்மையை விலக்க வேண்டும்.

6. அனாவசியமும் ஜம்பமுமான சுகங்களில் பிரியங்கொள்ளாதே. அவைகளைப்போல் மனிதனை முட்டாளாக்குவது எதுவு மில்லை.

7. ரிக்ஷா வண்டியில் போவதைக் கூடிய மட்டும் குறைத்து விடு. வண்டி வந்தாலுங்கூட நடந்துபோக முயல்.

8. மழைக்காலத்தில், உங்களில் எத்தனைபேர் முகங்களைக் குளிர்ந்த ஜலத்தால் கழுவிக் கொள்ளுகிறீர்கள்? நீங்கள் வெந்நீரையே உபயோகப் படுத்தல் கூடாது.

9. குளிர் காலத்தை வெயிற் கால மென்றும், வெயிற் காலத்தைக் குளிர்கால மென்றும் நினைத்துக் கொள்.

10. கிழிந்த துணிகளைத் தைக்காமல் உடுத்திக் கொள்ளுவது வெட்கத்துக் கிடமானது. கிழிந்த துணிகளைத் தைத்து உடுத்திக் கொள்ளுவதில் வெட்கப்படுவதற் கொன்றுமில்லை.

11. எது அவமான மான தென்பதை உணர்தல் வேண்டும். இதை உணராதவன், வாய்பேசா விலங்குகளிலும் கடையானவன்.

12. நீ திட சரீரத்தோ டிருக்கையிலேயே, அதிக உழைப்பைத் தாங்கப் பழகிக் கொள். ஆனால், நோயால் வருந்தும் போது வைத்தியர் சொற்படி செய்.

13. உன்னுடைய ஆடைகளும், செருப்பும் பெரியவையா யிருக்கட்டும். அவற்றின் வடிவு, அழகு முதலியவற்றைக் கவனியாதே.

14. நீ உன்னுடைய தேசத்திற்குப் பயன்படத்தக்க புருஷனா யாகக் கடவை. அப்படி யாகாதவன் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே நன்று.

K. I. தாவுத் சுல்தான் சாஹிப்,
மேலக் காவேரி, (கும்பகோணம் தாலுகா.)

சிறுவர்க்குரிய சிறந்த உபதேசங்கள்.

1. ஒரு குடும்பத்திற்குக் குலமங்கையே அழகு. குலமங்கையினுடைய வாழ்விற்கு மக்கட்பேறே அழகு. மக்களுக்குக் கல்வியே அழகு. கல்வியுடையவர்க்கு 'கல்விக்கழகு கசடற மொழிதல்' என்னும் நீதியின்படி குற்றமில்லாமல் பேசுதல் என்பதே அழகு. அதாவது நல்லவர் மெச்சும் நல்ல வழியிலே நடப்பதாகிய உயர்ந்த குணமுடையவராயிருத்தலாம். உயர்ந்த குணமுடையவர்க்குப் பேரறிவோடு விளங்குவதே அழகு. பேரறிவுடையர்களிடம், பரிசுத்தமான தவம், மேன்மை, உபகார குணம், பொறுமை, அடக்கம், அன்பு, அருள் முதலிய உத்தம குணங்கள் விளங்குவதே அழகாம்.

2. ஒருவனுக்குப் பெரியவர்களுடைய தரிசனங் கிடைக்குமாயின், அதுவே அவன் செய்த புண்யமாகும். அந்தப் பெரியவர்களுடைய மதுர மொழி கேட்பது அவன் செவி செய்த புண்யமாகும். அவர்களுடைய புகழைத் துதிக்கும் பாக்யம் பெறுதல் வாய் செய்த புண்யமாகும். அவர்களைச் சதாகாலமுந் தொழுவது அவன் கைகள் செய்த புண்யமாகும். அவர்களுடைய பணிவிடைகளைச் சிரமேற் கொண்டு செய்வது அவன் உடம்பு செய்த புண்யமாகும். அவர்களுடைய பேச்சைக் கேட்டு நடப்பது அவன் தன் பூர்வ ஜன்மத்திலே செய்த புண்ய மாகுமென் றறிக.

3. உலகத்தில் வறிஞனாயினுஞ் சரி, வளவனாயினுஞ் சரி, அவர்களுக்கு ஒரு காலத்தில் துன்பம் வாராமலிராது. துன்பமுண்டாமாயின் அது உடலை உருக்கிவிடும். அதுவும் வறிஞர்களுக்கு மிகுந்த தீங்கைச் செய்யும். அவர்கள் மேற்கொண்ட தொழிலைச் செய்ய வொட்டாமல் அல்லல் பல விளைக்கும். ஆகையினால் துன்பம் வந்தபோது அதனை உடனே நீக்க வழிதேட வேண்டும். 'துன்பத்திற் கிடங் கொடேல்' என்னும் போதனைப் படி மறவாமல் நடத்தல் வேண்டும்.

4. நான் என்கிற அகங்காரமானது பிறருடைய மனத்தைப் புண் படுத்தும். எனது என்னும் மமகாரம் அயலாரிடத்திலே பொறாமையை யுண்டாக்கும். பொறாமையினால் ஒழியாத துயரம் பெருகும். இவ் விரண்டும் உடையவன் உலகத்தார்க்குப் பகைவனாவன். அவன் இவ்வுலக வாழ்வை இழப்பான். இதோடு அவன் கடவுளுடைய கருணைக்கு அபாத்திரனாய் நரகத்திலே விழுந்து உழல்வான்.

ஆதலால் இகபர வாழ்வை விரும்பும் நீங்கள் அகங்கார மமகாரங்களை ஒழித்து அடக்கம் என்கிற உயர்ந்த குணத்தையே உடையவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். "அடக்கம் அமரரு ளுய்க்கும் அடங்காமை-ஆரிரு ளுய்த்து விடும்" என்பது போதனையன்றோ ?

5. தானம் மூவகையாகச் சொல்லப்படுகின்றது. அவை தலைப்படு தானம், இடைப்படு தானம், கடைப்படு தானம், என்பனவாம். தலைப்படு தானம், ஒருவன் தான் தரும வழியிலே சம்பாதித்த பொருளைக் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களும் நீங்கிய தவகுண முடையாரைத் தேடி இதனைக் கொள்ளுங்க ளென்று, அவரை நமஸ்கரித்துத் தனது குறையைச் சொல்லி மனமகிழ்ந்து கொடுத்தலாம். இடைப்படு தானம்,

தரித்திரர், குருடர், ஸ்திரீகள் முதலாகிய பிறர் படும் சிறுமைக் கிரங்கிக் கொடுத்த லாகும். கடைப்படு தானம், புகழ், அன்பு, கைம்மாறு, அச்சம், தாக்ஷண்யம் இவை காரணமாகத் தீராதென்று கொடுத்தலாம். தற்காலம் விசேஷமாகக் காணப்படுவது கடைப்படு தானமாகவே இருக்கின்றமை யின் இது கலி கால மகிமையென உணரலாம் போலும்.

குறிப்பு:—புகழுக்குச் செய்தாலும் நமது நாட்டாரின்க்ஷேமத்தைக்கருதி யாவது, நம் தாய் நாட்டின் முன்னேற்றத்தைக்கருதியாவது அளிக்கத்தக்க தருமத்தைச் செய்தால், அதமத்திலும் சற்று விசேஷமானதென்றே கருத லாகும். அந்தோ! நம் நாட்டிலுள்ள செல்வவந்தரில் பெரும்பாலார் நம்மவர்க் கும் நமது தாய் நாடாகிய புண்ணியம் பொருந்திய பாரத நாட்டிற்கும் தீமையை யளிக்கத்தக்க விஷயமாயினும், வீண் புகழ் ஒன்றுக்கு மட்டும் ஆசைப்பட்டே பெருந் தொகைகளைத் தருமமாக அளிக்கிறார்கள். இத னால் தங்களுக்குப் பெரும்பாபமேயன்றி எள்ளளவு புண்ணியமும் கிடைக் காதென்பதையும், இவ் வுலகில் நாம் செய்த செய்கைக்கு நம்மைத் தூஷித் திகழ்கிறார்களே யென்பதையும் இவர்கள் கவனிப்பதாய்த் தோன்றவே யில்லை. ஆண்டவன் இவர்களுக்கு நல்லுணர்ச்சியை யளிக்க வேண்டு மாய் நாம் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

6. உலகத்தில் விசேஷமாக மானிடர்களுடைய புத்தியைக் கெடுப் பது ஸ்திரீ சகவாசம், சூதாட்டம், கள் முதலியவைகளே யாகும். இவை யெல்லாவற்றையும் விட ஒருவனுடைய அறிவைக் கெடுத்துப் பெருங் கேட்டை யுண்டாக்குவது பொருளா லுண்டாகும் அகங்காரமே யாகும். இப்படி அகங்காரங் கொண்ட அறிவிலிகள் தங்கள் சரீரத்திற்கு நரை, திரை, மூப்பு, இறப்பு இவை இல்லை யென் றெண்ணி இந்திரியங்கள் தூண் டும் வழியிலே பிரவேசித்து நரகதுன்பங்கட்கு ஆளாகின்றனர். இவர்களை நல்வழிக்குக் கொண்டு வர ஒருவராலும் முடியாது. ஆனால் வறுமை யென் னும் பகைவன் வந்து எதிர்ப்பானாயின் அகமடங்கி வசப்படுவார்கள்.

"பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடின்
உருத்தெரி யாமலே ஒளிம ழுங்குமால்
மருந்துள தோவெனில் வாக டத்திலை
தரித்திர மென்னுமோர் மருந்திற் றீருமே"

என்று பெரியார் கூறியுள்ளர்.

வரகவி திரு-சுப்ரமண்ய பாரதியார், சென்னை.

இல்லறம்—சரீரவியல்

(311-ம் பக்கத்தொடர்ச்சி)

இவர்களுக்கு (பெண்களுக்கு) ச் சரீரவியல்பால் ஆகர்ஷணசக்தி அதிகமென்று முன்னர்க் கூறினோம். ஆகர்ஷணசக்தி இருவகைத்தாம். திருஷ்டி, ஸ்பரிசம் என்பன. இதனை அஸ்த தீட்சை, திருஷ்டி தீட்சை யென்று ஞான நூல்கள் கூறுவதனு லுணர்க. திருஷ்டி என்பது கண்பார்

வையா லுண்டாவது. இதனைத் திருஷ்டிதோஷம் என்று கூறுவர். ஸ்பரிசம் என்பது தொடுவதால் வருவது. இதனைத் தான் தீட்டு என்று சாதாரணமாய் வழங்குவது. தீட்டு என்ற பதம் தீண்டு என்னும் வினைப்பகுதியடியாற் பிறந்த தொழிற்பெயர். பிறரைத் தொடுவதா லுண்டாகுந் தோஷமாம். இத்தோஷங்களை வேறுவகையாற் கண்டுகொள்வது அசாத்தியமாயினும் வியாதியினாற் காணலாம். கண்வலி யென்னும் வியாதிக்காரர்களைப் பலமுறை நோக்குவதாற் பார்ப்பவர்களும் கண்வலி யடைவதும், அபஸ்மாரம், குஷ்டம், பெருவியாதி முதலிய வியாதியுடையவர்களை ஸ்பரிசிப்பதால் அவ்வவ் வியாதிகளை யடைவதும், பிரத்தியட்சத்தில் காணத்தக்கன. வைத்தியநூல்களும் இவ்வாறு கூறுகின்றன. இவற்றினால் மலமயமான சரீரத்தையுடைய பெண்கள் பிறபுருஷர்களுடைய சரீரத்தை அடிக்கடி ஸ்பரிசிப்பதினாலும், அடிக்கடி அவர்களைப் பார்ப்பதினாலும் அவர்களுடைய சரீரகுணங்களை யிழுத்துக்கொள்ள லாகும். அதனால் அப்பெண்ணினா லுண்டாக்கப்படும் சந்ததி தன் குலகுண ஒழுக்கங்களை யிழந்து அந்நிய குலகுண ஒழுக்கங்களை யுடையதாகும். அதனால் சற்சந்தான விருத்தியின்றிச் சங்கரஜாதிப் பிரஜைகள் மிகும். அது தன் குலத்துக்கும் தேசத்துக்கும் ஜாதிக்கும் தீமையை விளைவிக்கும். இல்லறமென்பது சற்சந்தானபி விருத்தியை யுண்டாக்கி யுலகத்தில் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கேயா மென்று வைதிகள் (வேதங்கள்) கூறுகின்றன.

இதற்கு அசுத்த மலமயமான பெண்கள் சரீரத்தைத் திருஷ்டி ஸ்பரிசம் முதலியவற்றால் மேலும் கெடுத்துவிடாமற் பரிபாலிப்பதை யன்றி வேறு மார்க்கங் காண்கிலோம். அதனாலேயே நமது பெரியோர் பெண்கள் விவாக பரியந்தம் புருஷர்களுடன் சம்பாஷிப்பதும், ஸ்பரிசிப்பதும், நோக்குவதும் கூடாவென்று கன்னியாமாடம் முதலியவற்றில் வைத்துப் பத்திரமாய்ப் பரிபாலித்து வந்தனர். வேறு புருஷரின் ஸ்பரிசம் முதலியவற்றால் கெடாமலிருக்கிற சரீரமுள்ள பெண்ணே இல்லற தர்மத்திற்குரியவளாவாள். நாயகனும் நாயகியும் ஒத்தநோக்கம், ஸ்பரிசம் முதலிய சம்பந்தத்தால் ஒரு தன்மையதான குணத்தையே பெறுவார்க ளென்பது நூற்றுணிபு. அப்போது சற்சந்தான விருத்தி (தாய் வழி தகப்பன் வழியாகிய இருவழியாலும் பெற்ற நற்குணமுள்ள பிரஜோற்பத்தி) யுண்டாய் நாடு க்ஷேமத்தை யடையும்; குலமும் விளங்கும்; அந்தப் பிரஜைகளும் சன்மார்க்கத்தி லொழுகி யிம்மை மறுமைப் பயன்களை யெளிதிலடைவார்கள். அன்றேல் சாதி சாங்கரியத்தால் (கலப்பினால்) உண்டாகும் தீமைகளைப் பெற்றுக் குலஹீனர்களாய் நல்லொழுக்க மில்லாதவர்களாவார்கள் என்பது சாஸ்திர சம்மதம். இங்ஙனமாகவும் பதார்த்த குணவியல்பு உணராதவர்களும், நமது முன்னோரது கருத்தின்னதென்று கண்டறியப் பெறாதவர்களும், இந்துக்கள் தங்கள் பெண்களைச் சிறையில் வைத்துத் துன்பப் படுத்துகிறார்க ளென்பர்.

வெயில், மழை, காற்று, பனியாதிகளை நமது பெண்களின் சரீரம்சகியா. ஆதலால் அவர்கள் வீட்டுக்குள் இருந்து வேலை செய்வதாகிய தொழிலையும், திடசரீர முடையவர்களாய்ப் பனி முதலியவற்றைத் தாங்கக்கூடிய சக்தியுடைய ஆடவர்களுக்கு வெளியில் அலைந்து திரிந்து வருந்திப் பொருளீட்டுதலாதி வேலைகளையும் நியமித்தனர் பெரியோர். இவ்வாறு விதித்

தது பெண்களை யிரட்சிக்கும் முறையாகுமே யன்றி, அவர்களை அடிமைக ளாக்குவதல்ல வென் றுணர்க* அதிகக் குளிர்ச்சியுள்ள தேசங்களில் இவ்வகையான தீமைகள் நேரிடுதலரிது. இத்தேசத்தில் வந்திருக்கும் சீதள தேசவாசிகள் வெப்பம் பொருக்கமுடியாமல் தலைவலி முதலியவற் றாலும், தேகத்தின் மேற் புறத்தில் கொப்புள முண்டாகப் பெறுவதாலும் வருந்துவது பிரத்தியட்சம். நமது நாட்டுச் சுமங்கலிகளான பெண்களுக்கு நித்தியஸ்நானம் விதிக்கப்படவில்லை. அப்பியங்கனம் செய்துகொள்ளும் தினமே அவர்கள் சர்வாங்கமும் நீரினல் கழுவப்படவேண்டு மென்றும் மற்றைய தினங்களில் கழுத்து அளவும் நனையும்படி குளித்தாற் (கண்ட ஸ்நானம்) போதுமென்றும் விதிக்கப் பட்டதும் காண்க. இதனுல் நமது பெண்களின் சரீரம் சூடு குளிர்ச்சி யிரண்டையும் தாங்கத் தக்க ஆற்றலற் றது என்பது புலப்படும்.

வெண்கலம் பித்தளை தாமரமாதிகள் பிறரால் தொடப்பட்டால் புளி யாலும் சாம்பலாலும் சுத்திபெறு மென்றும், வெள்ளி தங்க முதலி யன நீரால் கழுவினுல் சுத்தியா மெனவும், ஈயம் சாணத்தினுல் சுத்தமா மெனவும், மண் பாண்டங்கள் நெருப்பில் காய்ச்சுவதனுல் சுத்தியா மெனவும், மனிதர்கள் உபவாசத்தாலும் ஸ்நானத்தாலும் பஞ்ச கவ்யங்க ளினுலும் (பால், தயிர், நெய், கோமயம், கோசலம்) சுத்தி பெறுவார் கள் என்றும், ஸ்மிருதிகளும் வைத்திய நூல்களும் கூறுகின்றன. பெண் கள் சரீரத்துக்கு ஆகர்ஷண சக்தி யதிகமாதலால் பிறர் ஸ்பரிச முண் டான அப்போதே அசுத்தப் பட்டுவிடு மாதலால், அது நேரிடாத வாறு காப்பாற்றுவதே நன்று. அன்றேல் ஸ்பரிச தோஷம் சரீரமுழு வதும் வியாபித்து விடும். அதனு லுண்டாகுந் தீமைகள் அனந்த மாத லால் பிறகு கொடிய நோன்புகளாலும் ஔஷதங்களாலுமே அந்த நோய் களை நீக்க முயலவேண்டும். பொன்னையும் மணிகளையும் காப்பாற்றுவது போலப் பெண்களையும் பிறருடைய திருஷ்டி ஸ்பரிசம் முதலியவற்று லுண்டாகும்" தீமைகள் அணுகாதவாறு பத்திரமாய்க் காப்பாற்றுவதே தகுதியென்று நூல்களால் நுண்ணிதி னுணரத் தக்கது. பெண்கள் சரீர மும் ஆடவர் சரீரமும் ஒன்றோடொன்று மாறுபட்ட விருவேறு தன்மை களை யுடையனவென்றும், ஆடவர் சரீரத்தைப் பெண்களின் சரீரம் சீக்கி ரம் கெடுக்கும் தன்மையுடையது என்றும் முன்னர்க் கூறினும். அவ் வியல்போடு திருஷ்டி ஸ்பரிசந் தோஷங்களும் கூடினுல் அதனு லுண் டாம் தீமை அளவுகடந்தனவா மென்க.

இனி சகவாசத்தாலும் பற்பல தீமைக ளுண்டாகும். கண்டவர்களு டன் கூடிச் சம்பாஷிப்பதும் தீமையே. குலம், குடி, குணம், ஒழுக்கங்க ளாற் சிறந்தவர்களுடன் பழகுவதே யிருபாலார்க்கும் நன்மை. சகவாச தோஷத்தினுல் இயற்கைக்குணம் மாறுபடுதலும், குல ஒழுக்கங்கள் தவறு படுதலும் பிரத்தியட்சமாம். இது இருபாலார்க்கும் உரியதே யானுலும் பெண்களிடத்தில் இதை அவசியம் கவனிக்க வேண்டும். ஏனென்றல் பிறக்கும் சிசுவானது தகப்பனிடத்தி விருந்து ஜீவனையும், மற்றைய அந் தக் கரணதிகளும், தோல் மாம்சம், உதிரம் முதலியவற்றைத் தாயாரிட த்தி விருந்தும் அடைந்து பிறக்கின்றது. ஆதலால் தாயினது மனே வாக்கு, காயங்கள் குற்றப்படுவ தானுல் சிசுவும் அவ்வாறே குற்ற முடைய

தாகப் பிறக்கும். "பெண்க ளியல்பினுலேயே குற்றமுடையவர்க ளாயினும் அவர்களா லுண்டாகும் நன்மைகளை அனந்தமாகக் காண்கிறோ மாதலால் அவர்களை வெகு மானமாகப் பரிபாலிக்க வேண்டும்." அவை வருமாறு ;—

"சற்சந்தான விருத்தியை உத்தேசித்துப் பெண்களை மேன்மையாக நடத்தவேண்டும். வீடுகள் பெண்களாலேயே விளங்குகின்றன. ஒரு வீட்டிற்குப் பெண்ணே இலட்சுமியாவாள். இவளைத்தவிர இலட்சுமிதேவியால் விசேஷம் சிறிதுமில்லை. சந்தா னேற்பத்திக்குப் புருடர்கள் காரணர்கள். அவைகளைப் பெற்றளிப்பது பெண்களே. புத்திரர்களைக்காப்பாற்றல், அதிதி பூஜை, இவைகள் பெண்களாலேயே நடக்கவேண்டும். மனைவியே புத்திரர்களைப் பெற்றுத் தன்னையும்(கணவனையும்)பிதிர்க்களையும் சொர்க்க பதவியில் நிலைபெற நாட்டுகிறுள். பதியென்ற கணவன் சுக்கிலரூபமாய்த் தன் மனைவியின் கருப்பத்தில் தரித்துப் புத்திரரூபமாய்ப் பிறக்கிறுன். இதனுல் மனைவிக்கு (ஜாயா) என்றுபேர். ஸ்திரீ தன் கணவனிடத்தில் எவ்விதமான எண்ணங்கொண் டிருக்கிருளோ அவ்விதமான குணங்களையுடையவனுகவே புத்திரனும் பிறக்கின்ரு னென்று வேதங் கூறுகின்றது. நல்ல சந்ததியை விரும்புவோன் தன் மனைவியைப் பத்திரமாயும், சந்தோஷ முள்ளவளாக இருக்கும்படியும் பாதுகாக்க வேண்டும். பெண்களைப் பலாத்காரமாகத் தன் வசப்படுத்திக்கொள்ள முடியாது. ஆதலால் கணவன் தன் வீடு பண்டங்கள் எல்லாவற்றிலும் அவளுக்குச் சர்வ சுதந்தரம் கொடுக்கவேண்டும். தன் பணத்தை அவளிடங் கொடுத்துச் சகல காரியங்களையும் உசிதப்படி நடத்திவரும்படி அவளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் வேறு ஒருவரைக் கொண்டு நடத்திவந்தால் அவர்கள் இரட்சிக்கப்படாதவர்களாய் மனம் மடிந்து வருந்துவார்கள். ஆதலால் தன் வீட்டில் மனைவிக்குச் சர்வாதிகாரமும் கொடுத்துத், 'துஷ்ட சகவாசம், மதுபானம், பகலிலுறங்குவது, அயல்வீடு புகுவது, ஊர் விவகாரங்களைப் பேசுவது, கணவனைப் பிரிந்து வாழ்வது—ஆகிய ஆறு குற்றங்களும் நேராதபடி காப்பாற்ற வேண்டும்" என்று மநு கூறுகிருர்.

மனைவி தன் கணவன் மனதுக்கு ஒத்து நடந்து வருவாளானுல் கிரகஸ்தாசிரமம் மற்ற ஆசிரமங்களை விட உயர்ந்ததாம். அந்தத் தம்பதிகள் தர்மார்த்த காமம் என்கிற மூன்றையும் இம்மையிலே யடைந்து வாழ்வார்கள். தம்பதிகள் ஒத்து வாழ்வதே சொர்க்க வாழ்வாம். ஒற்றுமை யில்லாவிட்டால் அவ் வாழ்வு நரகானுபவமேயாம். ஒரு நாள் கணவன் அன்பைக் காணுவிடில் அந்த மனைவி யடையுந் துக்கம் சொல்லிமுடியாது. கிரகஸ்தாசிரம சுகம் முழுவதும் மனைவியி னிடத்திலேயே அமைந் திருப்பதால் மனைவி நற்குண நற்செய்கை யுடையவளா யிருப்பது பூர்வபுண்ணிய பலமேயாம். அநுகூல மானவளும், நற்சந்ததியைப் பெறுகிறவளும், சந்தோஷமுள்ளவளும், நற்குணநற்செய்கையை யுடையவளுமானமனைவிஸ்ரீதேவியேயென்பதிற் சந்தேகமில்லை. பெண்களை நல்வழிப் படுத்துவதற்கு, மநு கூறியவாறு ஆறு குற்றங்களும் சேராமல், கிருகத்தில் சர்வாதிகாரமும் சுதந்தரமுங் கொடுத்துத் தெய்வபக்தி, தர்மமார்க்கம் முதலியவற்றை உபதேசித்து நன்மார்க்கத்தில் நடக்கப் பழக்கவேண்டும். பிறருடன் நகையாடிப் பேசுதல், பரிகாசம் செய்தல், நாஸ்திகரோடும் துஷ்டர்களோடும்

சகவாசம் செய்தல் முதலியவற்றைப் பற்றற ஒழிக்கவேண்டும்; பலபேர்களுடன் கூடிப் பேசினால் வம்புப் பேச்சுகள் மிகுமாதலால் அதைத் தடுக்க வேண்டும். வேடிக்கை விநோதங்களில் புத்தி செலுத்துதல் நாடகம், பார்த்தல், இவைகள் பெண்களின் மன நிலையை மாறுபடுத்திவிடும்.'' என்று தட்சி ஸ்மிருதி கூறுகின்றது.

இன்னமும் அனேக விஷயங்கள் ஸ்மிருதிளிற் பெறப்படுகின்றன. அவைகளை விளக்கப் புகுந்தால் இச்சிறு நூல் பெருநூலாக விரியும். ஸ்மிருதி வசனங்களை எடுத்துக் காட்டியது எதற்கென்றால் மாறுபட்ட சரீர வியல்பையுடைய ஆடவர் மகளிருவரும் மனமொத் திருப்பதினால் சரீர குணமும் ஒத்துவரு மென்பதற்கும், அது கெடுதற்குரிய மார்க்கங்களை விலக்குவதற்கும், பெண்களின் மனம் வேறொன்றிற் செல்லாமல் ஒரு நிலைப்பட்டு நன்னெறியி லொழுகுவதற்கு வீட்டில் சர்வாதிகாரமும் கொடுத்துத் தர்மகாரியங்களை நடத்தும்படி செய்தால் பெண்கள் தங்களுக்கிடப்பட்டவேலையைச் சந்தோஷமாய்ச் செய்து கணவன் மனதுக்கு மாறுபடாமல் நடப்பது கூடுமென்பது விளக்குவதற்குமே யாம். (தொடரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

* குறிப்பு:—மாதர் ஆடவர்களின் இயற்கை நிலமைகளிலுள்ள வித்தியாசங்களையும் மற்ற உண்மைகளையும் அறியாதோர்களே. மாதர்களை நாம் (மிக்க அன்போடு ஆதரித்து அவர்கள் நன்மைக்காகவே) யிவ்வாறு நடத்துவதைஅவர்களை யடிமைகள்போல் நடத்துவதாகு மென்று கருதுகிறார்கள்; மாதர்கள் ஆடவரினும் உயர்வான பிறவிகளென்றும், ஆடவர்களால் ஒரு பெண் தெய்வம்போல் மரியாதையோடு உபசரித்துப் போற்றற் குரியவர்களென்றும் கருதி, அவர்களுடைய இகலோக எதிர்கால க்ஷேமத்தையும், ஆன்மார்த்த இலாபத்தையும் சற்றேனும் கருதாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலமென்பதுபோல், தற்காலத்தில் அவர்கள் பிரியம்போல் சந்தோஷமாய்ச் சுயேச்சையாய் நடந்து கொள்ளும்படி விட்டு விடுவதே அவர்களை ஆடவர்போல் பாரபட்சமின்றி நடத்துவதாகும் என்று இவர்கள் கருதுகிறார்கள்.

நமது முன்னோர்கள் அநித்தியமும், சடமும், துக்கமுடையவையுமான இவ்வுலக போகபாக்கியங்களைச் சட்டை செய்யாமல், எப்போதும் நிலையான பேரின்ப மளிப்பதாகிய மறுமைப் பயனிலேயே நாட்டம் வைத்தவர்கள். ஆகையால் நமது மாதர்கள் இகலோக போகங்களையளவோடனுபவித்து மறுமையிலும் உயர்பதவி யடைவதற்கு வேண்டிய விதி நிஷேதங்களையே மேதாவிகளாகிய நம் முன்னோர் ஏற்படுத்தி வைத்தனர்.

ஆண்டவன் இயற்கையிலேயே மாதர்களின் தேகங்களுக்கும், மனமாதி கரணங்களுக்கும் மிருதுத்தன்மையையும் இளகும் தன்மையையுமளித்திருக்கிறார். இதனால் அவர்கள் ஸ்திரீகளுக்குரிய அச்சம் மடம் நாணம் என்னும் (கற்புக்கு அவசியமான) பாதுகாப்புகளை யுடையவர்களாயிருப்பதற்கு அனுகூலமாகவிருக்கிறது. இத்தகைய மாறான சுபாவமுடையஇருவர்களாலும் உண்டாகும் சந்ததிகளும் அவ்வாறாகவே பிறப்பதால் மானிடர் இல்லறசுகத்தை யனுபவிப்பதோடு ஆன்மார்த்த இலாபமும்

பெறக்கூடியவர்களாக விருக்கின்றனர். இதைவிட்டு மாதரும் புருடர்கள்போலவே நடக்கும்படி விட்டுவிடப்பட்டால், பழக்கத்தால் அவர்களும் ஆடவர்போலவே கடினகுணங்களையும் மற்ற இயல்புகளையு முடையவர்களாகி முன்கூறிய அச்சம், மடம், நாணம் என்பவைகளை யிழந்து எல்லா விஷயங்களிலும் புருடசுபாவமே யுடையவர்களாகி விடுவார்கள். அதன்பின் உண்டாகும் சந்ததிகள் ஆண் பெண் இரண்டும் கேவலம் மிருக சுபாவங்களையே உடையனவாகி 'நானென்ன தாழ்வு? நீயென்ன உயர்வு? இருவரும் சமமே' என்ற அபிப்பிராயம் நிலைப்பட்டு, உலகில் ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டு வாழ்வதென்பதின்றி, இல்லறதர்ம மென்பதே அடியோடு போய், யாவரும் மிருகங்கள்போல் சுயேச்சையாய்க் காலங்கழிக்கும் நிலைமை யேற்பட்டு விடும் என்பதில் ஐயமின்றாம்.

"வேடிக்கை விநோதங்களில் புத்தி செலுத்துதல், நாடகம் பார்த்தல் இவைகளால் மாதர்களின் மனநிலை மாறுபடுமெனத் தட்சி ஸ்மிருதி கூறுகிறது" என்பது யாவரும் அவசியம் கவனித்து மனதில் வைத்து அநுசரிக்கத் தக்கது.

இதை யறிந்திருந்தும் நம்மவரிலேயே சிலர் நாகரீகச் சீர்திருத்தம் என்ற ஓர் பித்தம்கொண்டு நமது மாதர்களையும் வரம்பின்றி அவர்கள் பிரியம்போல் நடக்க விட்டுவிட வேண்டுமென்று கருதுகிறார்கள். அத்தகையோரும் ஏனையோரும், பெற்றோரும் மற்றோரும், நமது யோகீஸ்வரர் கூறும் மேற்கண்ட விஷயங்களை நன்கு கவனிக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

தெய்வமிகமேல்.

(303-ம் பக்கத்தொடர்ச்சி)

மற்றும் பல மகான்களுடைய கொள்கையு மிஃதே. இங்கு இரண்டொருவர் இயம்பி யுள்ளதை எடுத்துக் காட்டாகக் காட்டுவோம்:

சிவஞான முனிவர்— மலையின்மேல் பெய்யும் மழைநீர் பல அருவிகளாக வீழ்ந்து ஓரியாற்றில் கலப்பது போலவும், ஓரூருக்குச் செல்லும் பல மார்க்கங்களும் ஊருக்கணிமையின் ஒன்றாகக் கூடுதல் போலவு மிருக்கின்றதெனத் திருவாய் மலர்ந்துளார்.

"விலகிவீ ழருவித் தாரை வேறுவே றாக வோடிக்
குலநதிப் பாலி வைப்பி னேகமாய்க் கூடுந் தோற்றம்
அலகில்பல் வழியும் மூதூ ரணிமையி னொன்றா மாறும்
பலபல மதமு மீற்றி னொருவழிப் படலும் போலும்"
(காஞ்சிப் புராணம்)

"என்றெய்வ முன்றெய்வ மென்ற குறையோ."
"தீதுமத பேதங்க ளற்றுமே யெங்குமிது
செல்வதுவு மெக்காலமோ." ... ...
(மஸ்தான் சாகிபு)

ஆயினும் ஒரூருக்குச் செல்லும் மார்க்கங்கள் பலவற்றுள், சில செவ்வை யாயும் சில ஒழுங்கற்றவை யாயு மிருக்குமாப் போலே மதங்களாகிற வீட்டு மார்க்கங்களினும் இருக்கலாம். அஃதெற்றுக்கோ வெனின்? அவ் வக் காலத்துத் தோன்றிய மதஸ்தாபகர்களாகிய மகான்கள் அவ்வப் போதிருந்த கால தேசங்களை யனுசரித்து ஜனங்களின் மனோ வன்மைக் கேற்பப் போதிக்க நேர்ந்தமையே. உதாரணமாக மகம்மது அவதரித்த காலையில் அரேபியாவின் நிலைமையும், கிறிஸ்து ஜனித்த போது மேல் நாட்டின் நிலைமையும் எவ்வாறிருந்த தென உற்று நோக்குவோ மாயின் உண்மை புலனும்.

மேலும் அவர்கள், புற மதாசாரங்களைக் கண்ணுற்று இதுவோ அதுவோ எதுவோ நன்மார்க்க மென்னும் ஆராய்ச்சி தோன்றி எதிலும் நிலைக்க வொட்டாது செய்து விடுமோ வெனப் பயந்து, தம் சீடர்களுக்கு, 'நாம் போதித்த போதனைகளே வீடு பேற்றை யளிக்க வல்லன ; மற்ற வைகளால் யாதும் பயனில்லை ; அவற்றை நீவிர் நோக்காது நம் நிலையில் நில்லுங்கள்' என வைராக்கிய சித்தர்களாகும் படியும் கற்பித்தனர். இஃதும் அமைவுடைத்தேயாம். இன்றேல், எல்லா மதங்களையும் ஆராய்ச்சி செய்து ஏற்றதைக் கைக் கொள்வோ மெனக் கருதின், அலையோய்ந்ததும் நீராடுவோ மென் றூழியிடத் தமர்ந்திருப்பது போலன்றோ வாகும்.

இவ்வித அபிப்பிராய பேதங்களின் நிமித்தம் ஆண்டவனை யிகழ்தல் அநுசித மென்றே நாம் கூற வந்தது. நிற்க,

நம் இந்து மதமானது ஒருவராலாக்கப் படாததாய், மிகப் பழமை யினும் பழமையானதாய், பற் பல காலங்களிற் றோன்றிய பல மக ரிஷிக ளாலும் கால தேய வேறுபாடுகளுக் கேற்றபடி செவ்வையாக்கப் பட்ட தாய்,— நகர்ந்து நகர்ந்து செல்லும் முடவன் முதல் சகட முதலாய சாத னங்களால் விரைவில் சுகமாகக் செல்லக்கூடிய முயற்சியாளர் வரை யாவ ருக்கு மூத்வுமாறு செப்பனிட்டு அமைக்கப்பட்ட அகன்ற வழிபோல்— யாவரும் தத்தம் சக்திக் கேற்றவாறு பல்வகையாலும் செல்லக் கூடியதாய் அமைக்கப்பட் டிருக்கிறது. எதன் பொருட்டும் நாம் பிறரிடமேகி, கை யேந்தியேற்க வேண்டிய நிலையில் நம் பெரியோர் நம்மை விட்டிருக்க வில்லை. தருவி நாடுவோர்க்கு எம்மதமும் சம்மத மென்றுன்னும் உத்தம சமரச சுபாவமும் நம்மவரிடமே தோன்றி வளர்ந்ததென்பது தெற்றெனத் தெளிவாம்.

இத் தன்மை வாய்ந்த நம் மதத்துள்ளும் சில குறைகள் காணப் படுகின்றன. அவையாவை யெனின், வேறு சில மதங்களிற் காணப் படுமாறு சைவ வைவணமாம் பிரிவுகளுள்ளன. இவை எவ்வாறு ஏற் பட்டன வெனில், திணைபால்களின் பாகுபாட்டிலடங்காத ஓர் முழு முதற் பொருள் ஆக்கல், காத்தல், அழித்தலாகிற முக் கிருத்தியங்களின் பொருட்டு மூவுருக் கொண்டனரெனக் கூறியுள்ள நூல்களை யாராய்ந்த ஆன்றோர் சிலர், அவரவர் மனத்திற்குப் பிடித்த * தேவனையே பற்றுக் கோடாகக் கொண்டு, அத் தேவன் விஷயமாக வேதத்திற் கூறியுள்ளவை

* தேவன் = ஈண்டு அம் மூவுருவி லொன்றினை.

களை விளக்கிக் காட்டியும், பலர்க்குப் போதித்தும், நற்கதியடைந்தனர்.
பிற்காலத்தில் அவரவர் மாணவர் வாயிலாக அநேகர் அக்கொள்கை
களில் நம்பிக்கை வைத்துப் பின் பற்றலும், அவை யெங்கும் பரவின.
அம் மூவரில் சிவபிரானைத் தெய்வமாகக் கொண்டோரின் வழி வந்
தோரே சைவர். விஷ்ணுவாகிய காத்தற் றொழிற் றெய்வத்தைத் துதிப்
போரே வைஷ்ணவராவர். இதனால் சிவன் வேறு விஷ்ணு வேறெனக் கரு
துவ தெங்ஙனம்? ஆகையால் அரிஹரர் தம்முள் அபேதரே யாவரன்றோ?
"காய்தல் உவத்தல் இன்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்
ணதே," என்றபடி, பேத புத்தியின்றி ஆராயின் நம் பெரியோர் இவ்வித
பிரிவுகளை என் உண்டாக்கினா ரென்பது வெள்ளிடை மலையாம். அவ்வா
றின்றி துவேஷ புத்தியால் ஆங்காங்கு நிகழும் சிவ நிந்தனைகளையும், அரி
தூஷணங்களையும், அம்மம்ம! அவற்றாலுண்டாம் கலகங்களையும் எவ்வாறு
கூறுவது? இன்னும் வைணவத்தின் பிரிவாகிய வடகலை தென்கலைப்
போரைச் சிறப்பிக்க வேண்டின், அது ராம ராவண யுத்தத்தைச் சிறப்பித்த
கம்பராலன்றி ஏனையோரால் கூடும் தரத்ததோ? எத்தனை ஆலயங்கள் எத்
தனை வருடகாலம் பூட்டிடப் பட்டன. எத்தனை விக்ரகங்கள் குளங்களில்
மறைக்கப் பட்டன. எவ்வளவு பணம் நியாய ஸ்தலத்திற்காகச் செலவிடப்
பட்டன. அந்தோ! இவ்வித செய்கைகள் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்
கொண்டு திரும்பும் செய்கையின் பாற் பட்டவை யன்றோ? மெய்ப் பக்தி
யின்றி வாசாஞானம் பேசும் வேடதாரிகளாகிய அறிவிலிகளே இத்தகைய
வீண் விஷயங்களிற்றலை யிடுவார்கள் என்பதே ஆன்றோர் துணிபு.

இவ்வித பேதத்தால் துவேஷமும், துவேஷத்தால் பகைமையும்,
பகையாற் போரும், போரினால் தீவினையும், தீவினையால் பாவமும், பாவத்
தால் நிரயமும் சித்திக்கும். இதுவே மத த்வேஷ மென்னும் பேய்
கொண்டார் பெறும் பயன். ஆகையால் யாவரும் 'ஆறுசம யங்கடொறும்
வேறுவே றாகிவிளை யாடுமுனை யாவரறி வார்,' என்றபடி எல்லாச் சமயத்
தோராலும் வணங்கப் படும் கடவுள் மனம் வாக்குக் காயங்களைக் கடந்து
நிற்கும் ஓர் தனி முதலென்றுன்னித் தத்தம் மதங்களிற் கூறிய நெறி பிற
ழாது, புற மத பூஷணை செய்யா விடினும் தூஷணை மட்டு மின்றி, உலகம்
பழிக்கும் பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்த்து ஒழுகுவ மாயின்
இம்மையில் தேச க்ஷேமத்திற் கின்றியமையாத ஒற்றுமையும், அம்மையில்
முக்தியும் அடைதற்குத் தக்க சாதனமாகும். இவ்வித பேதம் பாராட்
டாது சிவ விஷ்ணுக்களில் யாவராயினு மொருவரை வணங்கலா மென்
றும், அவர்கள் தம்முள் அபேத ரென்றும் கூறிய உயர்வற உயர்நல மருளப்
பெற்ற மகான்களின் பாசுரங்களில் சிலவற்றை ஈண்டு வரைந்து இவ்வியா
சத்தை இனிது முடிப்பாம்.

"உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்து வியந்த விந்நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலு மிறைநிலை யுணர்வரி துயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய னரனென்னு மிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தோன்றே"

"ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னு மிவரை

ஒன்றனும் மனத்துவைத் துள்ளிநும் இருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே."
(திருவாய் மொழி)

"பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேனும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்"... ... ... (பொய்கையார்)

இவையன்றி,

"ஆதிப் பிரானு மணிமணி வண்ணனு
மாதிக் கமலத் தலர்மிசை யாயனுஞ்
சோதிக்கின் மூன்றுந் தொடர்ச்சியி லொன்றெனர்
பேதித் துலகம் பிணங்கி நின்றாரே"

என்ற திருமூலர் வாக்கானும் உண்மை விளங்குவ துணர்க.

பூ. ஸ்ரீநிவாஸன், தமிழ்ப் பண்டிதர்,
ராணிப்பேட்டை.

கைவல்ய வசனமும் ஐயவினாவும்

நாம் வரைந்து வரும் கைவல்ய வசனத்தில் "ஆன்மா சிவானந்தப் பேற்றைமட்டும் அனுபவித்தற் குரித்தானதே யன்றிச் சிவத்தைப்போல் பஞ்ச கிருத்தியாதிகளுக் குரியதாகாது" என்று கூறியிருப்பதைக் கண்ட இருவர் "பிரம்மமே ஜீவன், ஜீவன் பிரம்மமே; பந்தத்தில் கட்டுண்டிருக்கும் நிலையில் ஜீவன் எனவும், பந்தத்தினின்று விடுபட்ட நிலையில் பிரம்மம் எனவும் பெயர்பெறுகிறது" என்று கூறப்பட்டிருப்பதாலும், "ஜீவன் எதை விரும்பி யுபாசித்தாலும் அந்த மயமேயாகி அததற்கேற்பட்ட இன்பத்தையும் சுச்சியையும் பெறுவான்" என்று கூறப்பட்டிருப்பதாலும் நாம் மேல் கூறியது தவறு என்கிறார்கள்.

அதிலும் "பந்தத்தில் கட்டுப்பட்டிருக்கும் நிலையில் ஜீவனென்றும், பந்தத்தினின்று விடுபட்ட நிலையில் பரப்பிரம்மம் எனவும் பெயர் பெறுகிறது" என்று எழுதியவர் (முத்தையா-தூத்துக்குடி என்பவர்.) "ஆன்மா பரமான்மாவோ டயிக்கியப்படுகிறதென்ற விவகாரமிருந்தால் இரண்டு பொருள் என்று அர்த்தப்படுகிறது. ஒரு பொருளிருந்த விடத்தில் மற்ற பொருளிரா தென்பது உண்மை. ஆகவே கடவுள் சருவவியாபகர் என்ற இலக்கணத்துக்கும் விரோதம் எற்படும். ஆதலால் பொருள் ஒன்றே யெனத்தெற்றென விளங்குகிறது." என்று எழுதுகிறார்.

நேயர்களே! "ஓதரிய துவைதமே அத்துவித ஞானத்தை யுண்டு பணு ஞானமாகும்" "தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது-பின்னை யொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே" என்று தாயுமானவரும், "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே" என்று மாணிக்கவாசகரும், இன்னும் பல மகான்களும் கூறியுள்ளதற்கு மாறாக "பிரம்மமே பந்தத்தில் கட்டுப்பட்டால் சீவனெனப்படுகிறது, பந்தத்தினின்று விடுப்பட்டால் பிரம்மமாகிறது" என்ற கொள்கையையும், "ஆதலால் ஒன்றிலொன்று ஐக்கிய மடைதல் இல்லை

யென்ற தீர்மானத்தையும் எவ்வாறு மதிப்பதென்பதை யறிவாளிகளறிவர். இத்தகைய வீண் வாதங்களை யெல்லாம் சஞ்சிகையில் பிரசுரித்துக் கொண்டு, அதற்கு விவரமாய்க் கண்டனம் எழுதிக்கொண்டு காலத்தை வீண்போக்கி நமது சஞ்சிகையின் இடத்தை வீணுக்க நமக்குப் பிரியமுமில்லை; அத்தகைய சுபாவமுமில்லை.

இரண்டொரு வார்த்தைகள் கூறி இதை அறிவிக்கவே இப்போது இதைப்பற்றி வரையத்துணிந்தோம். மேற்கண்ட விஷயங்களைப் பற்றி ஐயுரு வண்ணம் திருட்டாந்த பூர்வகமாகக் குறித்த கைவல்லிய வசனத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. உண்மையை யூகித்தறிவோர் அறிந்தேயிருப்பர். திருட்டாந்தத்தில் குடநீர் கடலாயினும் பிறகும் கப்பல் ஓடுதல், பிராணிகள் சஞ்சரித்தல் முதலிய விவகாரங்களுக்குக் கடலை யாதாரமாகக் கூறுகிறேமே யன்றிக் குட நீரையல்ல. மேலும் "நீயற்ற அந்நிலையே நிட்டை" (தாயுமானவர்.)

"இருந்தார் சிவமாகி யெங்குந் தாமாகி
இருந்தார் சிவன்செய லியாவையு நோக்கி *
* * * * * * *"

('நோக்கியே' யன்றி 'செய்து' அல்ல).

" * * * * * *
தூங்கிக்கண் டார்சிவ போகமுந் தம்முள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே"

என்று திருமூலரும்,

"தன்னை யிழந்திடத்தே தானே சுகவடிவா
யின்னபடி யென்றுணரா வெங்கோனுட்—பின்னமற
நின்றநிலை தானுந் தெரியாதே நின்றவர்கட்
கன்றே பிறப்பறுக்க லாம்."

என்று சிவபோக சாரத்திலும்

கூறியிருப்பது போலத் தொழிலற்றுத் தற்போதமுமற்ற நிலையில் பஞ்ச கிருத்தியம் செய்வதெங்ஙனமோ? இதை வாசிக்கும் அறிஞர்களேயுணரலாகும்.

வசனத்தில் கூறியிருக்கும் முன்பின் விஷயங்களை நன்குணர்ந்து சிந்திப்பார்க்கு ஐயமுண்டாகாதென்றே நம்புகிறேம். அவ்வாறுண்டாயின் தக்க ஆன்றோர் வாய் நேரிற் கேட்டறிவதே உசிதம். வீணன வாதங்களுக்குச் சஞ்சிகை யிடந்தராது.

சீடன்.

"தமிழின் பெருமை"

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்"

என்றபடி பொதிகை மலையின் கண்ணே யுதித்து, வீர பராக்ரமம் பொருந்திய மன்னர் மன்னர்களான பாண்டியர்களின் புகழிலே வந்து தவழ்ந்து விளையாடியும், சங்கத்திலே இருந்தும், சமணர்களுடைய வாக்கு வாதத்தினல் வைகை யாற்றில் தமிழ்வரைந்துள்ள எட்டின்மூலம் எதிர் நோக்கிச் சென்றும், நெருப்பின் கண் வேகாமல் நின்றும், கற்றோர் மன திலே நடந்தும், பூமிதேவியின் இடையிலே தங்கிய நந்தமிழரசியைத் தற்போது சிலர் இகழ்ந்துகொண்டு வருகின்றார்கள். இவ்வாறாக இகழ்பவர்கள் மதியீனர்களே யாவார்கள். தன் தாயைத் தூஷிப்பவனுக்குச் சமானமாக நந் தாய்பாஷையை தூஷிக்கும் பாமரர்களைச் சொல்லுவது பொருத்த மாகும்.

"உலகத்தோர் புகழ்வ தான உத்தம தமி ழணங்கை
விலகரும் அருளின் மிக்கோர் விமலனை வாழ்த்த வேண்டி
அலகில்பல் யுகங்க ளோநம் மாயுளாய் மும்மைத் தாய
உலகமோ ருடம்பாய் அந்த உடம்பெல்லாம் வாயாய் நித்தம்
பலகவி மாலை சூடிப் பரவினும் முடியுங் கொல்லோ"

எனக் கூறியவாறு நந் தமிழின் பெருமையை ஒரு சிறிது மெடுத்து ரைக்க யானோ ஆற்ற லுடையேன்? அன்று! அன்று!! எனினும் என் பேரவா பிடர் பிடித்துத் தள்ள எழுதப் புகுந்தனன். நம்மை ஈன்றதும் தமிழ். நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ். நம் தாயும், தகப்ப னும் பாலோடு புகட்டினதும் தமிழ். நம்முடைய மதலைச் சொற்களால், நம் மன்னை பிதாக்களை மகிழ வைத்ததும் தமிழ். நாம் குழவிப் பருவத்தில் பேச வாரம்பித்தபோது முன்னர் மொழிந்ததும் தமிழ். இவைக ளெல் லா மிங்ஙன மிருக்க நந் தாய்ப் பாஷையை இகழலாமா? தாய்ப் பாஷை யைச் செவ்வனே கற்காமல், அன்னிய பாஷைகளைக் கற்க அவா வுறலா மா? இது "மாதா வயிறெரிய மகேஸ்வர பூஜை" செய்வதைப் போல விருக்கின்றது. இன்னும் இவர் வட மொழி முந்தின தெனவும், தென் மொழி பிந்தின தெனவும், சிந்தித்து வாக்கு வாதஞ் செய்கின்றார்கள்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி லிதன்பெருமை யாவரே கணித்தறிவார்"

என்ற செய்யுளினல் இரண்டு பாஷைகளையும் ஒரேமுறை இருமுனி வர்களுக்கும் போதித்துள்ளதாக நன்கு விளங்குகின்றது. சில கனவான் கள் ஆங்கிலத்தில் சிறிது பயின்றவுடன், தமிழ் பேசுவதையே மறந்து விடுகின்றார்கள். இவ் வண்ணம் மறந்தவர்கள் தன்னைத் தானே மறந்த வர்க ளாவார்கள். ஒருகால் தமிழ்ப் பேச நேர்ந்தாலும், ஆங்கில வார்த் தைகளைக் கலந்தே பேசுகின்றார்கள். இவர்களுடைய கருத்தென்ன வென்றால், தங்களுடைய உன்னத நிலைமைக்குத் தமிழ்ப் பேசுவது அவ் வளவு அந்தஸ்தைத் தாத் தக்கதல்ல வென்பதேயாம். இவர்க ளெல் லாம் இங்ஙனம் செய்தால் நம் தாய் பாஷை க்ஷீணிப்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

சில பாஷைகளை எழுதலாம், ஆனால் பேசுவதற் கியலா. வேறு சில பாஷைகளைப் பேசலாம் எழுதுவது துர்லபம். அவ் விதமான ஒரு குறைவு மன்றி, சொற் சுவை, பொருட் சுவை யொருங்கே யமையப் பெற்றது நந்தமிழ்ப் பாஷையேதான் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. "கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலேயாளமும், துளுவமும், உன் உதரத் துதித்தெழுந்தனவே" என்றபடி மேலே கூறியுள்ள பாஷைகள் எல்லாம் தமிழிடத்தி லிருந்து ஜெனித்தவைகளே. இன்னும்,

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொல்லோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

எனவுங் கூறப்படுவதால் தமிழ்ப் பாஷையே சிறந்ததாம். விரிக்கில் பெருகும். சிதைவு வாராமல் கடவுள் காப்பாராக.

A. Mohamed Ibrahim,
19—1—1920. Ibrahim Lodge, Papanasam.

குறிப்பு:— உலகில் சீரும் சிறப்பும் கௌரவமும் பெற்றுள்ள எந்த நாட்டாரும் தம் தாய் பாஷையை யலட்சியம் செய்வதில்லை யென்பதைத் தமிழ் மக்கள் கருதவேண்டும். தாய் பாஷையை யிழிவுபடுத்தி அன்னிய பாஷையைப் புகழ்ந்து கூறுவதே கௌரவமென்று கருதி நடக்கும் அறிவிலிகள் ஒருபோதும் முன்னேற்ற மடையார்கள். இப்போது நம் நாட்டாரில் பலர் ஆங்கிலம் கற்றுத் தாய்ப் பாஷையை யலட்சியம் செய்து விட்டிருப்பதால் நம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வளவோ இடையூறுகள் உண்டா யிருக்கின்றன. இவ்வாறு தாய் நாட்டிற்குத் தீங்கிழைப்பது பெரும் பாதகச் செயல் என்பதில் ஐயமுண்டோ. இனி யேனும் மாணவர்களாகிய நம் மக்கள் தாய்ப் பாஷையை யலட்சியம் செய்யா வண்ணம் பெற்றோர் கவனிக்குமாறு ஆண்டவன் அருள் புரிவாராக.

பத்திரிகாசிரியர்.

"காலத்தி னருமை".

"தேடப் படும்பொருளைச் சிக்கனவா கப்புதைத்துக்
கோடிக் கொருநிமிடங் கொள்ளுகினும்—கூடாத
வாணளை வீண்கழிக்கும் மானிடரைப் போன்மயக்கம்
பூணர்பொய் கண்டுதுறப் போர்."

என்று கண்ணுடைய வள்ளல் இயற்றிய ஒழிவிலொடுக்கத்தில் சொல்லிய வண்ணம், ஒரு நிமிடத்திற்குக் கோடி ரூபாய் கொள்ளுகினும், கொள்ளக் கிடையாத அவ்வளவு அருமையும் பெருமையுமுடையது ஜீவகாலம்.

காலத்தைச் சைவ சித்தாந்த நூலார், வித்தியா தத்துவங்களில் ஒன்றாகக் கூறுவர். தருக்க சாஸ்திர நூலுடையவர், காலத்தை நவ திரவியங்களுள் ஒன்றெனவும், நித்தியமான தெனவும், சகலத்திற்கும் பற்றுக்கோடாயும் எல்லாக் காரியங்களுக்கும் நிமித்த காரணமாயுமுள்ள தென

வுங் கூறுவர். காலமில்லாமல் வினையில்லை யென்பதாக இலக்கண நூல் களில் சொல்லப்பட்டிருக்கிறது. நிகண்டுடையார் காலத்தை ஒரு தேவ னாக எண்ணிப் பரியாயப் பெயரும் கூறிச்சென்றார். சேனாவரையர் உரை யால் ஆசிரியர் தொல் காப்பியனாரும் காலத்தை யொரு கடவுளாகவே பாவிக்கக் கூறினா ரென்பது, அறியப்படுகின்றது.

"ஆம்போது அவளோடும் ஆகும் அவள் பிரிந்து போம் போது அவ ளோடும் போம்" எனக் காலத்தைக் காரணமாக நீதிநூ லுடையாரும் கூறு வர். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் 'காலம் அறிதல்' என ஓரதி காரமே கூறினர். வேதத்தின் கண்ணாக, காலக் கணிதமாகிய சோதிடம் கூறப்படுகிறது.

அறியாமையுள்ள குழந்தைப் பருவத்தையும், யாதும் செய்ய ஏலாத முதிர்வயதையும் அகற்றினால் நின்ற நாள் நாற்பது, மிஞ்சினால் ஐம்பது வருட காலமாகும். இதிலும் நித்திரைக்கும், பிணிக்கும், நிவர்த்திக்க முடி யாத பல இடுக்கண்களுக்கும் போவது போக மிஞ்சியிருக்கின்ற காலம் மிக வும் சொற்ப காலமாம். இக் காலத்தில்தான் நாம் பெற வேண்டியவைக ளைப்பெற்று, செய்ய வேண்டியவைக ளனைத்தையும் செய்து முடிக்கவேண் டும். இதனால் கல்விப் பெருக்கமும், காலம் சுருக்கமுமா யிருக்கின்றன. "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்றார் பிறரும். இங்ஙனம் சுருங் கிய காலத்தில் வரம்பிலாக் கல்வி கற்றுத் தேறுவது எங்ஙனே யெனில், உள்ளதைக் கொண்டு நல்லது செய்வதுபோல, ஒரு நிமிடமாவது அவம் போக்காமல் காலத்தை யுபயோகப்படுத்த வேண்டும்.

இன்னும், வலியான் மிகுதியுடையவனாய் பகைவர்மேற் சேறலுற்ற அரசனும் அச்செயலிற்கேற்ற கால மறிதல் வேண்டும். எவ்வாறெனில் தூங் காமை, கல்வி, துணிவுடைமை என்னும் மூன்றாற்றலும், தானம், சாமம், பேதம், தண்டம் என்னும் நான்கு உபாயங்களும், நல்ல இடனும் ஆகிய கருவிகளை அடைந்திருந்தானாயினும் பகைவரை வெல்லுங் கால மறிந்து, அக்காலத்தை எதிர் பார்த்திருத்தல் வேண்டும். அவ்வா றிருத்தல் பொரு கின்றதகர் தன்பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால் வாங்கும் தன்மைத்து. அன்றியும் பகைவர் தன்பால் மிக்க குற்றங்களைச் செய்து திரியினும் தான் அவரை வெல்லத்தக்க காலம் வருமளவும் தன் பகை அவர் புறத்திற் றோற்றாமல் அவரைக் கண்டவுடன் பண்போடு உபசரித் துத் தன் உறவினரைப் போல் பணிதல்வேண்டும். பின்னர் அப்பகை வரை வெல்லுங் காலம் வந்து கூடியவுடன் அது கழிவதன் முன்னர் செய்யவேண்டிய வினைகளைத் தான் கருதியவழியே தப்பாமற் செய்துமுடி த்தல் வேண்டும்.

இன்னும், இலௌகீக வழக்கத்திலும், 'அவனுக்கு இஃதோர் நல்ல காலம்,' 'இது (கலி) காலதர்மம்,' 'காலக் கொடுமை,' என்னும் வழக்குக ளும்; 'நாள் செய்வது போல் நல்லோர் செய்யார்,' 'காலத்திற்கேற்ற கோ லம்,' 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்,' என்று சொல்லும் பழமொழி களும் வழங்குகின்றன.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது."

என்னுங் குறளில், ஒருவனுக்குத் துன்பம் வந்த காலத்தில் ஒருவன் செய்த உபகாரத்தின் அளவை நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க மகா வாரிசூழ் புவனத்தினும் மிகப் பெரிது என்பதனுல் நாம் ஒவ்வொருவரும் செய்யுங் காரியங்களை உரிய அவ்வக் காலங்களில் செய்து முடிப்பதனுல் அதிகமான பலனுண்டு என்பதாக தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுர் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்ருர். இன்னும்காலம் நன்மையைத் தீமையாகவும் தீமையை நன்மையாகவும் ஆக்க வல்லது. இது,

"மற்றைய மாதங்க ளொருநான்கும் வழு" என்று சைவசமய நெறியிலும், "வந்துவர்க் கடலினும் மூழ்குவர் கால மொன்றின்" என்று பிரபு லிங்க லீலையிலும் கூறப்பட்டிருக்கின்றது.

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

என்ற, பொய்யா மொழியில் 'பகற் காலமானுல் பல கூகைகளை ஒரு காக்கை வென்று விடும், இரவானுல் பல காக்கைகளைவெல்ல ஒரு கூகை போதும்' என்பதனுல், காலமே வலியாரை மெலியாராகவும், மெலியாரை வலியாராகவும் செய்யுமென்பது தெரிய வருகின்றது. காலமறிந்து மனிதர் வினை செய்வாராயின் எய்தாதன இல்லை. இதனை,

"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்."

என்ற தமிழ் மறையின் கூற்ருலுணர்க.

"நாம் எண்ணிய கருமங்களை யினிது முடிக்க ஒரு காலம் வந்து வாய்க்கும். நாம் அக் காலத்தை யறிந்து இழந்து விடாது அக்கணமே முயற்சி செய்து, செய்தற் கரிய அருஞ் செயல்களைச் செய்து முடித்துக்கொள்ளல் வேண்டும்" என்று,

"எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்."

என்னும் செய்யுள் கூறுகின்றது. "இச்சமயம் தப்பிப்போமாகில் மற்ருெரு சமயம் வாய்ப்பதருமை யாதலால் இச் சமயத்தைக் கைவிட்டு விடாதே" என்பதற்கு 'காலமும் கடலலையும் மனிதனுக்காகக் காத்திரா' என்பதோர் ஆங்கிலப் பழமொழியும் வழங்குகின்றது. 'ஐயர் வரும் வரை யமாவாசை காத்திருக்குமா?' என்ற நமது பழமொழியின் கருத்தும் இதுவேயாகும். பல வகையிலும் காலம் நாம் போற்றத்தக்க எப்பொருள்களிலும் சிறந்ததாகும். இதனை யுணராது பேதை மாந்தர் பலர் தம் வாழ்நாளை வீணுளாகக் கழித்து பயவாத களர் ஆகின்றனர்.

புல்லறிவாளர் 'இன்றைப்பொழுது வெகு நன்ருய்க் கழிந்தது.' எனச் சில சமயங்களிலும், 'இந்தப் பாழ்ம் பொழுது போக மாட்டேனென்கிறது.' எனப் பல சமயங்களிலும் சொல்வதை நாம் அடிக்கடி கேட்கிருேம். அநேகர், காதல், கவருடல், கள்ளுண்டல், முதலிய காரியங்களைச் செய்வதற்கேற்ற காலத்தை நற்கால மெனவும், மற்றைய காலங்களை

வீணென்றும் வருந்தி நிற்பர். இது முற்றும் குற்றமானது. பயனுடைத் தாய்க் கழிந்த பொழுதிற்கு மகிழ்தலும், பயனின்றிக் கழிந்த பொழுதிற்கு வருந்துதலுமே தக்கது.

காலம் ஒரு அருவப் பொருளே யாயினும் அதனை அறிஞர்கள் தக்க வாறு திறமையுடன் உபயோகிக்கின்ற படியால் கீர்த்தியும், ஐசுவரியமும், மற்றும் இம்மை மறுமைப் பயன்களையும் அடைந்திருக்கின்றனர்.

இதனை அல்வழியில் உபயோகித்துக் கொண்டதினாலே அறிவிலிகள் தங்களை யெவ்வளவோ தீமைகளுக்குட்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

"ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு."

என்பதனால், "அறிவிலி இந்த ஒரு பிறப்பிற்குள்ளேயே இனி யடைய வேண்டிய எழு பிறப்பிலும் அநுபவித்தற்குரிய நரகத்தைத் தேடிக் கொள்ள வல்லவனாவான்" என்று செந்நாப்போதார் கூறியதும் இது பற்றியேயாம்.

நமது வாழ்நாளே, காலத்தினா லாயிருக்கிறபடியால், அதை வீணாகக் கழித்தல் நம்மை நாமே கொலை செய்து கொள்ளல்போ லாகும். "காலம் தன் பாட்டிற் கழிந்து அதன் கொலைக் குற்றத்தை யுங்கள் தலைமேல் சுமத்துகிறது." என்றொரு வாக்கியம் ஆக்ஸ்போர்டு கலாசாலையில் ஒரு கடிகாரயந்திரத்தின் மேல் வரையப்பட் டிருக்கின்றதாம். இதை யோசிக்கையில் வீண்பொழுது போக்குகிறவர்கள் எவ்வளவு திடுக்கிடத் தக்கவர்களா யிருக்கின்றனர் என்றுவிளங்குகிறது. இக்கருத்தைப் புலப்படுத்தவே நமது பெரு நாவலரும், காலமானது நாளென்று அளவு செய்யப்படுவ தொரு கால வரையறை போலத் தன்னைக் காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிரென்று உணர் வார்களுக்குத் தெரிவிக்கின்றது என்பதை,

"நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்."

என்று பொதுமறையில் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்.

இன்னும் ஒரு ஆங்கில மேதாவியார் நமது வாழ் நாளை ஒரு யந்திரத்திற்கு ஒப்பிட்டிருக்கின்றார். எங்ஙனே யெனில், தன்பாட்டிற் சுழன்று கொண்டிருக்கும் ஒரு யந்திரத்தில் அரிசியையோ அல்லது கோதுமை முதலிய பிறவற்றையோ கொடுத்தால் அது அவற்றை அரைத்து மாவாக்கிக் கொடுத்து விடுகிறது. அல்லாமல் மண், கல் முதலியவற்றைக் கொடுத்தால் அவற்றையும் அது அரைத்துக் கொடுத்து சும்மா விட்டுவிட்டால் தானே சுழன்று சுழன்று தேய்ந்து போய் விடுகிறது. அது போலவே நம் வாழ் நாளை நல்வழியில் உபயோகித்துக் கொண்டால் நலங்களையும், அல்வழியில் உபயோகித்துக் கொண்டால் தீமைகளையும் அடைவது மின்றி வெறுமனே விட்டுவிட்டால் தானே அழிந்து விடுகிறது என்பதாம்.

மற்றொருவர் நம் வாழ்நாளை ஓர் புலத்திற்கு ஒப்பிடுகிறார். எங்ஙன மெனில், ஒரு புலமானது எருப் பெய்து, இளங்களை பிடுங்கி, நல்விதை விதைத்துப் பாது காத்து வரின், நல்ல விளைபொருள்களைத் தரும்; கவனி

யாதுவிடின், நச்சுப்புல் முதலியவைகளை முளைப்பித்துத் தீமை விளைவிப்பதோடு, தானும் கெட்டுப் போய் விடும். இப்படியே நம் வாழ் நாளும் ஆய்விடும் என்பதாம்.

நம் வாழ் நாள் முழுவதிலும் இளமைப் பருவமானது இன்னும் அதிகமாய்ப் போற்றத் தக்கது. இவ் விளமைப் பருவந்தான் ஒருவன் தன் வாழ்நாள் முழுவதையும் ஒழுங்கு செய்து கொள்ளற் குரிய பருவமாகும். ஆங்கில கவியாகிய ஜான் மில்டன் என்பவர், "ஒரு தினத்தில் காலை நேரம் எப்படியோ அப்படியே மனிதனுடைய வாழ்நாளில் இளமைப் பருவமும்" எனக் கூறியிருக்கின்றார். இதனை நோக்கப் பிள்ளைகளும் பிள்ளைகளிடத்து அக்கரை யுள்ள பெற்றோர்களும் இதில் மிகவும் கவலை யெடுத்துக் கொள்ளற்பாலர். இதைப்பற்றி ஆங்கிலத்தில் ஓர் வாக்கியம் உண்டு. அதாவது:— 'வசந்த காலம் அரும்பு வைக்கா விடில் வேனிற் காலத்தில் அழகிருக்காது. வறளை காலத்தில் பழமும் கிடையாது.' என்பதாம்.

"முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்." எனவும்,
"மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை." எனவும்,

நமது தமிழ் மூதாட்டியாராகிய ஸ்ரீசாரதாவதார மென்னும் ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந் தருளியிருக்கின்றார்.

அநுபூதி ஞானம் நிட்டையினு லல்லது பெறப் படாமையாலும், நிட்டை உடம்பும் அறிவும் தளர்ச்சி யடையும் முதுமைப் பருவத்திற் சித்திக்க மாட்டாமையாலும், ஞானசாரியரை அடைந்து ஞான சாத்திரங்களைக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்கையும் இளமைப் பருவத்திற்றனே செய்தல் வேண்டும் என்று,

"முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறுனுயிற்—செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கண்
...யளவே யாகுமா மூப்பு."

இக்காரணம் பற்றியே ஔவையாரும் நல்வழியில் கூறியுள்ளார்.

காலத்தினருமையைப் பற்றிக் கூறவந்த கவிச் சக்ரவர்த்தியாராகிய கம்பர், "நமது நாட்களும் இளமைப்பருவமும் சென்றுகொண் டிருக்கின்றன. அவற்றைத் திரும்பவும் நாம் பார்க்கப் போவதே கிடையாது. அவையிறந்து போகப் புதிது புதிதாக வேறு நாட்கள் வந்துகொண் டிருக்கின்றன." என்பதை,

"ஈண்டு நாளும் இளமையு மீண்டில
மாண்டு மாண்டு பிறிதுறும் மாலைய."

என்று சுந்தர காண்டத்தில் கூறியிருக்கின்றார்.

இவ்விளமையை வறிதே போக்கிக் கொண்டவர் தம் வயதில்,

"வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
ஆர்த்த வறிவில்லை யம்பலத்துக்—கூத்துடையான்
சீலம் சிறிதேயும் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழிந்து."

என்றவாறே கழி விரக்கங் கொள்ளற் குரிய ராவார் என்று தண்டி யலங்கார உதாரணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

கோவலன் தான் மன்னர் விழையுங் குடியுட் பிறந்த பெரிய சீமானு யிருந்தும் அவ்வளவு வருத்தப்பட நேர்ந்த தெல்லாம், தன் இளமைப்பருவத்தைத் தீய வழியில் உபயோகித்துக் கொண்டதன் பயனுகவே வந்த தென் றிரங்கினு னென்பதை,

"வெம்முனை யருஞ்சுரம் போந்ததற் கிரங்கி
யெம்முது குரவர் என்னுற் றனர்கொல்?
மாயங் கொல்லோ! வல்வினை கொல்லோ?
யானுளங் கலங்கி யாவது மறியேன்!
வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கு நன்னெறி யுண்டோ."

என்று கொலைக் களக் காதையில் சிலப்பதிகாரம் ஞாபகப்படுத்துகிறது.

சுருக்கமாகச் சொல்லில் இம்மை மறுமைக் குரிய சகல சுக துக்கங்களும் இன்ப துன்பங்களும் ஆகிய எல்லாம் காலத்தை யுபயோகிக்கிறதில் தான் அடங்கியிருக்கின்றன; ஆதலால் காலத்தை நுட்பமாகச் செலவழிக்க வேண்டும். நாம் செய்யவேண்டிய காரியங்களைத் தீர்மானித்துக்கொண்டு, ஒரு நிமிடமாவது பலனின்றிச் சும்மா கடந்து, யோசிக்கிறதும், செய்கிறதுமான இவ்விரண்டிற்கும் மத்தியில் காலம் வீணே கழியாமல், ஒவ்வொரு நிமிடத்தையும் பலனுடையதாகச் செய்யவேண்டும்.

இவற்றை யுற்று நோக்கின் தம்மைத் தாமே கொலை செய்துகொள்ள (வீண் பொழுது போக்க) உடன்படுவார் யாவர்? காலத்தினும் விலை யுயர்ந்த பொருள் உலகத்தில் வேறு யாதுளது? ஆதலால் இவ்வருமையான காலத்தை உபயோகமுடையதாக்கி, நாம் பயனடைவதோடு, நம் தேசம், தாய் பாஷை இவற்றிற்கும் பாடுபட்டு என்றும் அழியாத புண்ணியங்களை அடைவோமாக!

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து."

C. P. வஜ்ஜிரவேலு,
லக்ஷ்மி வாசக சாலை, கோயம்புத்தூர்.

கற்கோட்டை—நாவல்.

(319-ம்பக்கத் தொடர்ச்சி)

ஸர்தார்.—"சாப்பாடு தயாராக ஒரு மணியாகும். அதற்குள் நான் போய்ப் பார்த்து வருகிறேன்" என்று கூறிக்கொண்டே, கேடையம் முனிலிங்கை யழைத்து வந்த சந்து வழியாகவே துரிதமாய் வீட்டை விட்டுச் சென்றார்.

அவர் சென்ற பிறகே கேடையம், அப்பா என்று திகில் நீங்கி, இனிப் பயமில்லையென்று, சந்தோஷத்தால் தன் உள்ளங் கைகளைத் தேய்த்துக் கொண்டான். ஐந்து நிமிடங் கழித்து கவசம் அங்கு வந்து தனக்கும் முனி லிங்குக்கும் நடந்த சங்கதியைச் சுருக்கமாகக் கூறி, "அவன் சற்றும் சந் தேகப்படாமலிருக்கிறான். 20 அல்லது 25 நிமிடம் கழித்தும் என்னைக் காணவிட்டால்தான் அவனுக்குக் கிலேசம் உதிக்கும். ஸர்தார் வர அரை மணியாவது செல்லும். இனிநாம் நமது எஜமானருக்கு சங்கதிதெரிவித்து விட்டு, அவர்கள் யோசனையையும் கேட்டுக்கொண்டு உடனே குதிரைகளை யாயத்தம் செய்வோம்" என்றான். கேடையம் அதுதான் ஒழுங்கென்றான். உடனே கவசம் தானணிந்திருந்த கண்ணபிரான் உடையைக் களைந்து விட்டபின், இருவரும், கண்ணபிரானும், சகோதரப் பிரபுக்களும், கம லாம்பாளும் சம்பாஷித்துக்கொண்டிருக்கும் அறைக்குச் சென்றார்கள்.

பிரபுக்கள் கணையாழியைப்பற்றி உண்மையைக் கூறியபின் நால்வரும் ஓடிவிடுவதென்று தீர்மானித்த சமயந்தான் கேடையமும், கவசமும் கல வர முகத்தோடு அறைக்குள் வந்தார்கள் என்று 27 வது அத்தியாயத்தின் இறுதியில் நாம் கூறியது.

கேடையம் உடனே நேரிட்டிருக்கும் ஆபத்தைக்கூறி "பிரபுக்களே! தட்சணம் இதைவிட்டு ஓடிவிடவேண்டும்" என்றான். சகோதரப் பிரபுக் கள் ஏறிவந்த குதிரைகள் மிக்க களைப்படைந்திருந்ததால், அவர்களுக்குக் குதிரை யில்லை. தங்கள் தமையன் மறுபடி சிறையாக்கப்பட்டிருப்பதை யறிந்ததே, அவர்கள் கண்ணபிரானை நோக்கி,

"சகோதரரே! எங்களால் உமக்கும் தீங்குண்டாகும். நாங்கள் பிரிந்து தெற்கு நோக்கிச் செல்கிறோம். ஊர் ஓரத்தில் வேறொரு ஹோட்டலிருக் கிறது. அங்கே குதிரைகள் கிடைக்கக்கூடும். நீர் ஜாக்கிரதையாய்க் கம லாம்பாளை அழைத்துச்செல்லும்" என்று கூறிவிட்டு ஆட்களிருவரையும் நோக்கி, "நீங்கள், உங்களுக்கு ஆபத்தை யுண்டாக்கிக்கொண்டு, செய்த தந் திரத்தால் எங்களைக் காப்பாற்றத் துணிந்ததற்காக மிக்க நன்றி பாராட்டு கிறோம்" என்று கூறிவிட்டுத் துரிதமாய்ச் சென்றார்கள்.

சகோதரப் பிரபுக்கள் சென்றதே கேடையம் கவசம் இருவரும் கண்ண பிரானிடம் கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு, அவனையும் கமலாம்பா ளையும் நோக்கி, "நீங்கள் உடனே புறப்பட்டு உலவச் செல்வதுபோல் தோட்டத்தின் மேல்கோடியில் இருக்கும் நீண்டசந்திற்குச் சென்று அங்கு மரங்கள் அடர்ந்திருக்கும் இடத்தில் நில்லுங்கள். நாங்கள் பத்து நிமிடங் களில் வந்து சேருகிறோம்" என்று கூறிவிட்டு உடனே புறப்பட்டார்கள்.

இருவரும் நேராய் முனிலிங்கின் ஆட்கள் தங்கியிருக்கும் ஹோட்ட லுக்குச் சென்று அவ்வீரர் இருக்கும் அறைக்குள் நுழைந்தார்கள். அவர்க ளும் சாளரத்தின் வழியாய் இவர்களை முன்பே கண்டு தங்கள் தலைவனை யழைத்துச்சென்ற கேடையம் என்ன சங்கதி கொண்டு வருகிறானோ வென்றுஆவலோடு எதிர்பார்த் திருந்தார்கள். ஆகையால் கேடையத்தைக் கண்டதே, "எங்கள் தலைவர் வேலையைப்பற்றி என்ன ஏற்பாடாயிற்று?" என்றார்கள்.

கவசம்:—"எல்லாம் அனுகூலமாகவே முடிகிறது. அவர்கள் புறப்படும் போது கூட அழைத்துச் செல்ல பன்னிரண்டுபேர் காவலர்களை யேற்படுத்தி யிருக்கிறார்கள். ஆகையால் நாமும் எச்சரிக்கையாய் நமது வேலையைச் செய்ய வேண்டும். நான் எங்களுடைய ஆட்களை யழைத்துக்கொண்டு திரும்பிவரும்போது இவ்வழியேவந்து உங்களை யழைத்துச் செல்வேன். உங்கள் தலைவர் இந்த ஏற்பாட்டை யுங்களுக் கறிவிக்கச் சொன்னார். இதோ அவர் கொடுத்த கடிதம் கூட. நாங்கள் நேராய்ச் சென்று ஆட்களைக் கூட்டிக் கொண்டே யிங்கு வந்திருப் போம். ஆனால் இடையில் இரண்டு வேலைகள் நேர்ந்தன. உங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் யாவும் தாராளமாய்க் கொடுக்கும் படி ஸர்தார் ஹோட்டல் காரருக்குக் கட்டளையிடச் சொன்னார். இரண்டாவது, எங்கள் எஜமானருடைய மூன்று புத்திரர்களும் புத்திரி யும் சவாரி போகவேண்டுமாம். தங்கள் புரவிகளைக் கொண்டுவரச் சொன்னார்கள்" என்று கூறிவிட்டு ஹோட்டல்காரனிடம் சென்று அவனிடமுள்ள குதிரைகளில் ஒரு குதிரையும், ஸ்திரீகள் உட்காரும் சேணமும் வேண்டுமென்று கூறி, தாராளமான பணம் கொடுத்து வாடகைக்குவாங்கிக்கொண்டு தங்கள் இரண்டுகுதிரைகளையும் கண்ண பிரான் குதிரையையும், சேணம் கட்டிப் பிடித்துக்கொண்டு வீரர் கள் கண்முன்பாகவே ஹோட்டலைவிட்டு வெளிக் கிளம்பினார்கள்.

இவர்கள் சென்று ஐந்தாறு நிமிடங்கள் கழித்து ஹோட்டல்காரன் வீரர்களுக்கு வேண்டிய குடிவகை உணவுப்பொருள் யாவும் வட்டித்து விட்டு, அவர்கள் இருக்கும் அறையிலேயே தானும் உட்கார்ந்து சம் பாஷிக்க முயன்றான். அப்போது வீரரில் ஒருவன் மற்றவர்களை நோக்கி,

"இந்தக் குதிரைகள்-ஸர்தாருடைய புத்திரர்களுக்கும் புத்திரிக்கும் கொண்டு போனார்களே அவை-நேர்த்தியானவை" என்றான்.

ஹோட்டல்காரன்.—"என்ன? ஸர்தாருடைய புத்திரர்களும் புத்திரியுமா? அவருக்குச் சந்ததியே கிடையாதே" என்றான்.

அதைக்கேட்ட வீரர்கள் திடுக்கிட்டு, "என்ன? சந்ததியே யில்லையா? அவருடைய சொந்த ஆட்களே கூறினார்களே" என்றார்கள்.

ஹோட்டல்காரன்.—அவருடைய ஆட்களா! அவர்க ளிருவரும் கண்ண பிரான் பிரபுவின் ஆட்கள். குதிரைகளில் மூன்று அவர்கள் மூவருடை யனவே. நான்காவது ஒரு ஸ்திரீக்கு வேண்டுமென்று வாடகைக்கு வாங்கிச் செல்கிறார்களே" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே வீரர்கள் "ஓகோ மோசம்! மோசம்! சதி நடக்கிறது. எங்கே எங்கள் குதிரைகள்?" என்று ஆத்திரத்தோடு பாய்ந்தெழுந்து குதிரைலாயத்தை நோக்கி யோடினார்கள்.

30-வது அத்தியாயம்.

இப்போது நாம் முன்னே சென்ற ஸ்ர்தார் குணலிங்கம் பிரபுவும் அவர் தம்பி விக்ரமநாதம் பிரபுவும் எங்குச் செல்கிறார்களென்று பார்ப் போம்.

இருவரும் ஊர் ஓரத்திலிருக்கும் மற்றொரு ஹோட்டலுக்குச்சென்று இரண்டு புரவிகள் கிடைக்குமா வென்று விசாரித்தார்கள். ஹோட்டல் காரன் "குதிரைகள் கிடைக்காது" என்றான். அச்சமயம் ஹோட்டல் ஆட்களில் ஒருவன் வந்து அவன் செவிகளில் என்னவோ கூற, ஹோட்டல் காரன் பிரபுக்களைநோக்கி "பிரபுக்களே! இப்போதுதான் நீங்கள் யாரென்று இவன்வந்து கூறினான். மிக்க விசனப்படுகிறேன். நேர்த்தியான இரண்டு குதிரைகள் இருக்கின்றன. ஆனால் சற்றுமுன்பு வந்த ஒரு பெரிய மனிதர் தன் இரண்டு ஆட்களுக்காக அவைகளை வாடகைக் கமர்த்திக் கொண்டு பணம் கட்டிவிட்டார்" என்றான்.

பிரபுக்கள்.—அவர் எங்கிருக்கிறார் காட்டு! அவரையேனும் கேட்டுக் குதிரைகளை வாங்கிக்கொள்கிறோம்.

ஹோட்டல்காரன்.—பிரபுக்களே! அவர் தானே அறையை விட்டு வெளி வருமுன் ஒருவரும் கிட்டே வரலாகாதென்று கண்டிப்பாய்க் கூறினார். அவர் பெயர் கூட வெளிப்படவில்லை. அதோடு அவர் மிக்க அதிகார தோரணை யுடையவராகவே காணப்படுகிறது. அவர் கட்டளைப்படி அவர் குதிரையும் ஆட்கள் குதிரைகளும் மூன்றும் சேணம் கட்டப் பட்டுத் தயாராய் நின்றுகொண் டிருக்கின்றன. அவரைக் கேட்பதில் பயனில்லை யென்பதே யென் கருத்து.

பிரபுக்கள்.—வேறெங்கும் குதிரைகள் அகப்படாவோ ?

ஹோட்டல்காரன்.—"வேறெங்கும் இல்லை. என் நீங்கள் இராணியின் அலுவலாய் வந்தவர்கள்தானே. நீங்கள் அதிகாரத்தோடு ஸர்தாரிடமாவது நகர அதிகாரியிடமாவது வேண்டிய உதவியைப் பெறலாமே" என்றான்.

பிரபுக்கள் இருவரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். இருவர் மனதிலும் ஏககாலத்தில் ஒரே யோசனை யுதித்தது. மூத்தபிரபு ஹோட்டல்காரனை நோக்கி, "நன்றாய் நினைப்பூட்டினை; சேணங்கட்டி நிற்கும் அக்குதிரைகளைக் காட்டு பார்ப்போம்" என்றார். ஹோட்டல்காரன் அவ்வாறே யிருவரையும் அழைத்துச்சென்று மூன்று குதிரைகளையும்காட்டி "இவற்றில் இதோ இந்த இரண்டுமே அவருடைய ஆட்காரர்களுக்காக நான் கொடுத்தது" என்று அவற்றைக் காட்டினான்.

மூத்தபிரபு உடனே தன்னிடமிருந்த கணையாழியை யெடுத்து இதோ இக்குறியாகிய இராணியின் அதிகாரத்தால் இந்த இரண்டு குதிரைகளையும் எங்கள் உபயோகத்திற்காக நீ கொடுக்கவேண்டுமென்று கூறி, அவன் கையில் நான்கு ஸவரன்களைக் கொடுத்தார். ஹோட்டல்காரன் கணையாழியைக் கண்டதே தாழ்மையாய் வந்தன மளித்தான். அச்சமயம் சமீபத்தில் யாரோ மெதுவாய் நகைப்பது போல் சத்தங்கேட்கப் பிரபுக்கள் அத்திக்கை நோக்கினபோது, கெம்பீரம் பொருந்திய உயரமான ஒரு மனிதன் வாசற்படியருகில் வந்துநிற்பதைக் கண்டார்கள். ஹோட்டல்காரன் "ஆ, இவர்தான் அப்பெரிய மனிதர். நீங்களே யவருக்கு சங்கதியைக் கூறிவிடுகிறீர்களா ?" என்று சகோதரர் இருவர்க்கும் இயம்பினான். அவர்கள் வாய்திறப்பதற்குள்,

(தொடரும்)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

ரௌத்திரிஸ்ரீ சித்திரைமீ—சாலிவாகனம் 1843-கலியுகாதி 5022

பசலி 1329-30—கோல்லம் 1095-96 - ஹிஜரி-1338-39

இங்கிலீஷ் 1920-ம்ஸ்ரீ ஏப்ரல்மீ—மேமீ

சித்திரைமீ	ஏப்ரல்மீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	13	செ	நவ-1-26	திரு-19-27	சி-60	வருஷப்பிறப்பு
2	14	பு	தச-0-58	அவி-22-37	பி-32 சி	யந்திரவேலை
3	15	வி	ஏ-1-43	சத-28-43	ம-28 சி	....
4	16	வெ	து-1-25	பூர-29-29	சித்த-60	விவசாயம், ருதுசாந்தி
5	17	ச	ச-57-29	உத்-29-7	சி-29 ம	ஏர் உழ
6	18	ஞா	●-53-43	ரே-27-41	அ-27 சி	அமாவாசை
7	19	தி	பிர-49-32	அசு-25-20	சித்த-60	வாகனங்கொள்ள
8	20	செ	து-43-50	பர-22-16	சித்த-60	....
9	21	பு	தி-3-96	*கிரு-19-32	அ-19 சி	கர்ப்பாதானம்
10	22	வி	ச-33-4	ரோ-15-39	மர-60	வாஸ்துபுருஷன்
11	23	வெ	ப-26-58	மிரு-11-29	சித்-60	வியாபாரம், ஏர் உழ
12	24	ச	ஷ-20-0	திரு-7-23	சித்த-60	வியாபாரம்
13	25	ஞா	சப்-15-21	பூச-57-29	சித்த-60	ருதுசாந்தி
14	26	தி	அ-10-15	ஆயி-57-23	சி-57 ம	கல்கட்டிடம்கட்ட
15	27	செ	நவ-5-46	மக-55-23	சித்த-60	தீவாந்தரப் பிரயாணம்
16	28	பு	ஏ-58-6	பூர-53-26	அ-60	மீனம் பிரயாணம்
17	29	வி	து-59-45	உத்-54-42	ம-54 சி	குடிப்போக, வியாபாரம்
18	30	வெ	திர-57-34	அஸ்-56-0	அ-56 சி	யந்திரவேலை [ம்
19	1920ஸ்ரீ மேமீ 1	ச	ச-58-40	சித்-58-47	ம-58 அ	கிரஹண சம்பந்ததோஷ
20	2	ஞா	○-59-58	சுவா-60-0	சித்த-60	இரவு சந்திரக்கிரஹணம்
21	3	தி	பிர-60-0	விசா-34-29	அ-1 ம	மந்திரம் ஜெபிக்க, கிரக
22	4	செ	பிர-3-45	விசா-7-2	ம-7 சி	கிதாரம்பம் [சாந்தி
23	5	பு	து-8-4	அனு-12-53	அ-12 சி	
24	6	வி	தி-13-3	கேட்-19-16	பி-19 சி	
25	7	வெ	ச-18-8	மூ-25-49	அ-25 பி	
26	8	சனி	ப-23-2	பூரா-32-6	சித்த-60	
27	9	ஞா	ஷ-27-15	உத்-37-46	சித்த-60	
28	10	தி	சப்-30-35	திரு-42-27	அ-42 சி	
29	11	செ	அ-32-47	அவி-47-3	சி 47 ம	
30	12	பு	நவ-33-47	சத-48-6	அ-48 சி	
31	13	வி	தச-33-27	பூர-50-34	சித்த-60	

சு-பு	கு செ		
	18 மேஷசு 20-கன்னி வசெமேபு		குரு
			சனி
		ரா செ	

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.